இறைவன் உதவியுடன்

வெளியீடு 1

# NET NEWS

## மாத சஞ்சிகை

உண்மைச் செய்திகளை
உடனுக்குடன் உங்கள்
கைபேசியில் அறிய
Follow me!
Az-Zahra 1st
F <space> azzahra1st
Send to 40404

01-01-2017 ஜனவரி



பக்கம் 14

## ஷைகுல் பலாஹ் வரலாறு..



பக்கம் 37

கவிதை

## மீன் பிடித்தல்

மதியன்பன்



பக்கம் 11

## எது உலக அதிசயம் ?



பக்கம் 4

## இதுதான் காரணம்

இம் மாத பிரமுகர்கள்



அரசியல் வாழ்வில்
கால் நூற்றாண்டு பதித்த

பா.ம.உறுப்பினர்

## எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

பக்கம் 17



ஆளுமையின் சிகரம்

## அப்துர் ரஹ்மான் Eng

பக்கம் 23



பக்கம் 28

## அல் ஹாஜ் முகம்மது ஷிப்லி பாறூக் Eng

(கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)

பக்கம் 33



தன்னம்பிக்கை மஸாஹி வழங்கும்..

## வாழு.. வாழவிடு.. வாழ்க்கைகொடு..

(புதிய Inspiration தொடர்..)

netnewsmagazine@gmail.com

www.net-news12.blogspot.com

Hot Line: (+94)77 779 2144 | 75 074 5028

Rs. 100/=

Net News, No: 7/13 Saihul Falah Road, Kattankudy -03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிகை:

NET NEWS

இதழ்: 01

ஆசிரியர்: றஸான் ஜஃபர்

வெளியீடு:

RAM Publication

திகதி: 01.01.2017

விலை: 100/=

முகவரி: நெட் நியூஸ்,
7/13, செய்குல் பலாஹ் வீதி,
காத்தான்குடி-03.

தொலைபேசி:

(+94)77 779 2144 | 75 074 5028

E-Mail:
netnewsmagazine@gmail.com

Web:net-news12.blogspot.com

அன்பான வாசகர்களே!..

இன்றைய உலகில், இன்டர்நெட் கடலில் ஒவ்வொரு வினாடியும் இலட்சக்கணக்கான விடயங்கள் மிதக்க விடப்படுகின்றன. இவ்வாறு மிதக்க விடப்படுபவைகளில் - மிகப் பிரயோசன மானவை, பிரயோசன மானவை, பிரயோசன மற்றவை, அவசியமற்றவை, அசிங்கமானவை, அகோரமானவை என பல்வேறுபட்ட விடயங்கள் காணப் படுகின்றன.

கணினியோடு தொடர்புபட்ட ஒரு சமூகம் தனக்கு முடிந்த அளவு விடயங்களை அவ்வப்போது பார்த்துப் படித்து விடுகிறது. கணினியோடு தொடர்பு இல்லாதவர்கள் மிகப் பிரயோசனமான விடயங்களைக் கூட படிக்கத் தவறிவிடு கின்றனர்.

கணினியோடு தொடர்பு இல்லாதவர் களும், அதிக நேரம் கணினியைப் பயன்படுத்த வாய்ப்பில்லாதவர்களும், முக்கிய விடயங்களை ஆவணப் படுத்த விரும்புபவர்களும். பிரயோசனம் பெறும்வகையில் இந்த நெற் நியூஸ் மாத சஞ்சிகை வடிவமைக்கப் பட்டுள்ளது.

இம்மாசிகையின் வளர்ச்சி வாசகர்களா கிய உங்கள் கரங்களிலேயே தங்கி யுள்ளது.

ஆசிரியர்

நெற் நியூஸ் மாத சஞ்சிகைக்கு ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப விரும்புபவர்கள் netnewsmagazine@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தைகள் சாப்பிட மறுக்கின்றனரா?



குழந்தைகளை சாப்பிட வைப்பது எப்படி? சாப்பிட அடம் பிடிக்கும் குழந்தைகளாக இருந்தால் முதல் நாள் இரவே, அடுத்த நாள் சமையலை அவர்களுடன் சேர்ந்தே திட்டமிடுங்கள். குளித்தல் உள்ளிட்ட அன்றாடக் கடமைகளைச் செய்து முடித்து, குழந்தைக்குப் பசித்த பிறகு உணவு தரலாம். வழக்கமான இட்லி, தோசை, சாதம் போன்றவற்றுக்குப் பதிலாக, குழந்தைக்குப் பிடித்த உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். பாலுடன் கார்ன்ஃபிளேக்ஸ், அரை வாழைப்பழம் சேர்த்துக் கொடுக்கலாம். இதில் புரோட்டீன், இரும்புச்சத்து, கார்போஹைட்ரேட் மற்றும் நார்ச்சத்து இருக்கிறது.

ஓட்ஸ் காய்கறி கலவை அல்லது தேன் கலந்த ஓட்ஸ், அரை ஆப்பிள் கொடுக்கலாம். ரவையுடன் முந்திரி, பாதாம், உலர்திராட்சை சேர்த்த கேசரி அல்லது பிரெட் சாண்ட்விச் அல்லது வெண்ணெய் தடவிய பிரெட் கொடுக்கலாம். இட்லிக்கு நிலக்கடலை சட்னி, காய்கறிகள் சேர்த்த உப்புமா, வேக வைத்த முட்டை, பன்னீர் டோக்ளா என எளிமையான உணவுகளை வித்தியாசமாகச் செய்யலாம். காலை உணவோடு ஒரு பழம் நல்லது!

சமைக்கும்போது சின்னச் சின்ன வேலைகள் செய்ய குழந்தைகளை அனுமதியுங்கள். தனது பங்களிப்பை செலுத்தும் போது, அது தான் சமைத்த உணவு என்ற எண்ணத்துடன் ரசித்து ருசித்து சாப்பிடப் பழகும் குழந்தை. பள்ளிக்கான தயாரிப்புகளை இரவே முடித்து விடுங்கள். தொலைக்காட்சி நேரத்தைக் குறைத்து, வேறு விளையாட்டுகளை அறிமுகம் செய்யுங்கள். குழந்தைகளின் வேலையை அவர்களே செய்ய வாய்ப்பளியுங்கள்.

காலை நேர டென்ஷனை தவிர்க்க இது உதவும். சாப்பிடும்போது பெற்றோரும் இணைந்து கொண்டால் போட்டி போட்டு சாப்பிட்டு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தலாம். பெற்றோரும் சரிவிகித சத்துணவுக்கு மாறுவதே நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம் தொலைந்து விட்டதா?



ஒவ்வொரு மனிதனும் தினமும் ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை ஆழ்ந்து சுகமாக தூங்க வேண்டும். இப்படி நன்கு தூங்கி எழுந்தால் தான் விழித்திருக்கும் 16 மணி நேரத்தில் மனமும் உடலும் திறமையுடன் செயல்படும். எனவே இரவில் தூங்க முடியவில்லை என்பவர்கள் கீழ்கண்ட எழிய வழிகளைப் பின்பற்றுவது நல்லது இரவு எத்தனை மணிக்கு படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்பதை உறுதியாகத் தீர்மானியுங்கள்

இரவு தூங்கும் அறை நிசப்தமாகவும், இருட்டாகவும் இருப்பதும் நல்லது, இருட்டு பிடிக்க வில்லை எனில் நீல நிற இரவு விளக்கைப் பயன்படுத்தவும் தூங்கும் அறை காற்றோட்டம் நிறைந்த தாக இருக்க வேண்டும். பஞ்சுத் தலையணைகள், பஞ்சு மெத்தை, போர்வை சுகமான தூக்கத்தை வர வழைக்கும். தரையிலோ, கட்டிலிலோ படுத்தாலும் பஞ்சு மெத்தைகளையோ உபயோகிக்கலாம் தூங்குவதற்கு அரை மணி நேரம் முன்பாக பசும்பால் அருந்துவது நல்லது.இது டிரைப்டோபன் அமிலத்தை மூளைக்கு வழங்குவதால் உடனடியாக நரம்பு மண்டலம் அமைதியாகி உங்களை தூங்க வைக்கும்.

மாலை 4 மணிக்கு கா.:.பைன் உள்ள காபி மற்றும் மது புகையிலை போடுவதை தவிர்க்கவும். இவை நரம்பு மண்டலத்தை தூண்டி விடுவதால் இரவு தூங்க நெடுநேரம் ஆகிவிடும். மசாஜ் ,யோகாசனம் மற்றும் தியானம் போன்றவை மனதையும் உடலையும் ஓய்வு நிலைக்குக் கொண்டுவந்து புதுப்பிக்கும். உங்களுக்கு இதில் எது பிடித்ததோ அதைச் செய்து வாருங்கள்.

இரவு உணவை தூங்கச் செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன்பே முடித்துக் கொள்ளவும் சாதம் நல்லது, ஏனென்றால் அதிகம் சாப்பிட்டாலும் எளிதில் ஜீரணம் ஆகும். நெஞ்செரிச்சல் ஏற்படாமல் இருக்க இடக்கைப் பக்கமாகவே படுக்கவும். மல்லாந்தோ, வலகைப் பக்கமோ படுத்தால் நெஞ்செரிச்சல் ஏற்பட்டு தூக்கம் கலையும் எப்போதும் குப்புறப் படுக்காதீர்கள். தினமும் உடற்பயிற்சி துரித நடைப் பயிற்சி, ஏரோபிக் உடற்பயிற்சி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின் பற்றவும். அருகில் உள்ள இடங்களுக்கு துரித நடைப் பயிற்ச்சியாக சென்று வருவது நல்லது கனமான தலையணைகளை தவிர்க்கவும்.

உள்ளங்கால்களை நாமே அமுக்கி விட்டுக் கொண்டாலும் நரம்பு மண்டலம் அமைதியாகி உடனடியாகத் தூக்கம் வரும். படுத்ததும் கவலைகளை நினை விற்குக் கொண்டு வராதீர்கள் கண்களை மூடிக்கொண்டு நீங்கள் வசிக்கும் சாலையை கற்பனையில் பாருங்கள். அந்த சாலை முழுதும் மூடுபனி படர்ந்துள்ளது போலவும், அந்த வெண்புகைக்குள் நீங்கள் நுழைந்து சாலையில் செல்வதாக கற்பனை செய்யுங்கள். தூக்கம் வரும். பகலில் உங்கள் சௌகரியத்தைப் பொறுத்து இருபது அல்லது முப்பது நிமிடங்கள் தூங்கலாம். இதனால் மதியம் மிகுந்த விழிப்புடன் உங்கள் பணிகளைச் செய்வீர்கள் பல ஆண்டுகளாகத் தூக்கமின்மையால் அவதிப் படுபவர்கள் மதியமும், இரவும் கெட்டித் தயிர் சிறிது உப்பு சேர்த்து சாப்பிட்டு வந்தால் போதும்.தூக்கமின்மை குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் காரணம்



*அண்மையில் இஸ்லாத்தை தழுவிய அமெரிக்காவின் பிரபல்ய கால்பந்தாட்ட வீரர் இமானுவல் இஸ்லாத்தை தழுவியதற்கான 13 காரணங்களை கூறுகிறார்!*

1.இயேசுநாதர் (ஈஸா அலை) ஏகஇறை கொள்கையையே நிலைநிறுத்தினார். (Deut 6:4, Mark 12:29) இதனையே முஸ்லிம்களும் பின்பற்றுகின்றனர்.

2. பன்றியின் இறைச்சியை இயேசுநாதர் (ஈஸா அலை) சாப்பிடவில்லை. (Leviticus11:7) இதேபோன்று முஸ்லிம் களுக்கும் பன்றியின் இறைச்சி தடுக்கப் பட்டுள்ளது. (திருகுர்ஆன்6:145)

3. இயேசுநாதர் (ஈஸாநபி) "அஸ்ஸலாமு அலைக்கும்"என்றுமுகமன் கூறினார். (John 20:21) இதையே முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது பின்பற்று கின்றனர்.

4. ஒரு விடயத்தை செய்யநினைக்கும்பொழுது, "இறைவன் நாடினால்" என்று இயேசுநாதர் கூறினார். இதையே முஸ்லிம்களும் பின்பற்றுகின்றனர். (திருகுர்ஆன் 18:23- 24)

5. இறைவனை வணங்குவதற்கு முன்னர் இயேசுநாதர் (ஈஸாநபி) முகத்தையும், கைகளையும், கால்களையும் கழுவினார். முஸ்லிம்களும் தொழுகைக்கு முன்னர் இவ்வாறே வுழு செய்கின்றனர்.

6. பைபிளில் கூறப்பட்ட முன்னைய நபிமார்களை போன்று இயேசுநாதர் (ஈஸாநபி) நெற்றியை தரையில் வைத்து இறைவனை வணங்கினார்.(Matthew 26:39) முஸ்லிம்களும் தங்களது இறைவணக்கத்தை இவ்வாறே செய்கிறார்கள். (திருகுர்ஆன்3: 43)

7. இயேசுநாதர் (ஈஸா நபி) தாடி வைத்திருந்ததுடன், நீண்ட அங்கியும் அணிந்திருந்தார். முஸ்லிம்களை பொறுத்தவரை இது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இயேசுநாதர் (ஈஸாநபி) நபிமார்கள் அனைவர் மீதும் நம்பிக்கை வைத்திருந்ததுடன், அவர்களது சட்டங்களையும் பின்பற்றினார்கள். (Matthew 5:17) இதுபோன்றே முஸ்லிம்களும் முஹம்மது நபி (ஸல்) அவர்களுடன் சேர்த்து, அனைத்து நபிமார்களையும் கண்ணியப்படுத்துகிறார்கள். (அல்குர்ஆன் 3:84, 2:285)

9. இயேசுநாதருடைய (ஈஸா நபி) கண்ணியத்திற்குரிய பரிசுத்தமான தாயாரான மரியம் (அலை) தங்களது தலைமுடியை மூடியும், உடம்பின் பகுதிகள் வெளித்தெரியாமலும் கண்ணியமாக ஆடை அணிந்திருந்தார்கள். (1 Timothy 2:9, Genesis 24: 64-65, Corinthians 11:6) இவ்வாறே முஸ்லிம்பெண்களும் ஹிஜாப் உடையணிந்து, அன்னிய ஆடவர்களின் பார்வையிலிருந்து தங்களை தற்காத்துக்கொள்கின்றனர். (அல்குர்ஆன் 33:59)

10. இயேசுநாதரும் (ஈஸாநபி) 40 நாட்கள் நோன்பிருந்தார்கள். (Exodus 34:28, Daniel 10:2-6. 1 Kings 19.8, Matthew 4:1) முஸ்லிம்களுக்கும் ரம்ழான் மாதத்தில் நோன்பிருத்தல் கட்டாயமாகும். (அல்குர்ஆன் 2:183)

11.இயேசுநாதர் (ஈஸாநபி) வீட்டினுள் பிரவேசிக்கும் பொழுது, வீட்டில் இருப்பவர்களைப்பார்த்து, "உங்கள்மீது சாந்தி உண்டாகட்டுமென்றும்" கூறுவார்கள். (Luke 10:5) இதேபோன்றே முஸ்லிம்களும் வீட்டினுள் நுழையும்பொழுது "அஸ்ஸலாமுஅலைக்கும்" உங்கள்மீது சாந்தி நிலவட்டுமாக என்று கூறுமாறு அல்குர்ஆன் பணிக்கிறது. (அல்குர்ஆன் 24:61)

12. இயேசுநாதர் (ஈஸா நபி) விருத்தசேதனம் செய்திருந்தார். செய்யும்பொழுது அவர்கள் 8 நாள் குழந்தை (Luke 2:21) தோராவில், நபி ஆபிரஹாம் (அலை) அவர்களுக்கு எப்பொழுதுமே கட்டுப்படவேண்டிய உடன்படிக்கையென்று (விருத்தசேதனம் செய்தல்) இறைவன் கட்டளையிட்டிருந்தான். (Genesis 17:13) அல்குர்ஆனில் 16:123 அத்தியாயத்தில் முஸ்லிம்கள்இப்ராஹிம் (அலை) அவர்களின் மார்க்கத்தை (வழிமுறையை) பின்பற்றவேண்டும் இப்ராஹிம் நபி அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது, (சஹீஹ் புஹாரி, முஸ்லிம்,)

13. இயேசுநாதர் (ஈஸாநபி) அராமிக் மொழி பேசினார்கள். இறைவனை "எலாஹ்" (Elah) என்று அழைத்தார்கள். அது"அல்லாஹ்" என்று அரபியில் உச்சரிப்பதற்கு சமனாகும். ஏனெனில் "எலாஹ்"என்ற சொல், அரபியில் உள்ள "அல்லாஹ்" என்ற வார்த்தையிலிருந்து உதித்ததாகும்.எனவே இயேசுநாதரை (ஈஸா நபி) உண்மையான முறையில் பின்பற்றுபவர்கள்,

கிறிஸ்தவர்களா....??? முஸ்லிம்களா....???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை உயிராக நேசிப்பவரா நீங்கள்?



ஒரு இராணுவ வீரனும், ஒரு இளம் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார்கள். மூன்றே மாதத்தில் போர் ஏற்பட இராணுவ வீரன் போருக்குப் போக வேண்டியதாகி விடுகின்றது. அவன் போகும் போது மனைவி கர்ப்பிணி. இருவருமே மிகுந்த மன வருத்தத்தில் பிரிகிறார்கள். போர் முடிந்து உயிரோடு திரும்புவது நிச்சயமில்லையல்லவா?

ஆனால் அதிர்ஷ்டவசமாக போருக்குப் போன வீரன் மூன்றாண்டுகள் கழிந்து வெற்றிகரமாக திரும்புகிறான்.. விமான தளத்தில் அவன் மனைவியும், மகனும் அவனுக்காகக் காத்திருக்கிறார்கள். மனைவியையும் மகனையும் ஆனந்த மாகக் கட்டியணைத்துக் கொள்கிறான் அந்த வீரன். அவன் கண்ணிலும், மனைவி கண்ணிலும் ஆனந்தக் கண்ணீர்.

வீடு திரும்புகிறார்கள். கணவனுக்குப் பிடித்த சமையல் செய்ய சாமான்கள் வாங்கி வர மனைவி மார்க்கெட்டுக்குச் செல்ல வீட்டில் மகனும், தந்தையும் மட்டுமே இருக்கிறார்கள்.

கூச்சத்துடன் ஒதுங்கி நின்ற மகனைப் பார்த்து வீரன் கேட்கிறான். "அப்பாவுடன் ஏன் பேச மாட்டேன்கிறாய்?"

அந்தச் சிறுவன் குழப்பத்துடன் தந்தை யைப் பார்த்து விட்டு சொல்கிறான். "நீங்கள் ஒன்றும் என் அப்பா இல்லை"

வீரன் மகனைக் கேட்கிறான். "பின் யார் அப்பா?"

"தினமும் என் அம்மா நிற்கும் போது நிற்பார். அம்மா உட்காரும் போது அவரும் உட்கார்வார். படுக்கும் போது அவரும் கூடப் படுத்துக் கொள்வார். அவர் தான் என் அப்பா என்று அம்மா சொல்லியிருக்கிறாள்"

வீரனுக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது.

மனைவி சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்த பின் கணவனிடம் திடீர் மாற்றத்தைக் கண்டாள். அவன் அவள் சமைத்ததை உண்ணவில்லை. அவளை அவன் தொடவில்லை. அவள் அவன் அருகில் வருவதைக் கூட அவன் மறுத்தான். இரண்டு நாட்கள் இப்படியே நிகழ மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

மனைவி இறந்த அன்று இரவு தந்தையும் மகனும் படுத்துக் கொள்ளச் செல்லும் போது தந்தையின் நிழலைக் காண்பித்து மகன் சொல்கிறான். "இதோ என் அப்பா"

திகைத்த வீரன் மகனை விசாரிக்கும் போது உண்மை வெளிவந்தது. தாயின் நிழலைப் பார்த்த மகன் ஒரு நாள் இது யார் என்று வெகுளித் தனமாய் கேட்ட போது, மகன் தந்தை அருகில் இல்லாத குறையை உணரக் கூடாது என்று அவள் இது தான் உன் தந்தை என்று சொல்ல சிறுவன் அன்றிலிருந்து அந்த நிழலையே தந்தையாக நினைத்து வந்திருக்கிறான்.

வீரன் தாங்க முடியாத குற்றவுணர்ச்சியாலும், துக்கத்தாலும் மனமுடைந்து போகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதையில் மகன் சொன்னதைக் கேட்ட வீரன் தன் மனைவியிடம் விளக்கம் கேட்டிருக்கலாம்.. மனைவியும் கணவனின் நடவடிக்கைக்கு விளக்கம் கேட்டிருக்கலாம். இருவரும் வெளிப் படையாக மனம் விட்டுப் பேசியிருந்தால் அவர்கள் வாழ்க்கை ஆனந்தமாகச் சென்றிருக்கும். ஆனால் கணவன் தன் மனைவியின் நடத்தை மோசமாக இருந் திருக்கிறது என்று தானாக முடிவெடுத்து அப்படி வெறுப்புடன் நடந்து கொண் டான். மனைவியாவது ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று அவனைப் பதில் சொல்ல வற்புறுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் தானாக வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். ஒரு குடும்பமே தகர்ந்து போனது வாய் விட்டுக் கேளாமல், மனம் விட்டுப் பேசாமல் இருந்ததனால் அல்லவா?

எதையும் தவறாகப் புரிந்து கொள்ளு வதும், தவறாக ஆக்கி விடுவதும் சுலபம். சந்தேகக் கண்ணாடியை வைத்துப் பார்க்கும் போது எதற்கும் எத்தனை தப்பர்த்தங்களும் நம்மால் காண முடியும். இந்த முட்டாள்தனத்தில் பலியாவது உறவுகளும், நட்புகளும், சந்தோஷங்களும் தான்.

## மனைவிக்கு உள்ள சிறப்புகள்

மனைவி என்றால் அன்பின் இன்னொரு சொல் என்றும் கொள்ளலாம்

பணிக்கு செல்லும் மனைவிகள் எல்லாம் குடும்பம் சுமக்கும் அன்புதேவதைகள்

ஆணுக்கு ஒரு பக்க மத்தளம் என்றால் பணிக்கு செல்லும் மனைவிகளுக்கு இரண்டு பக்க மத்தளம்

பெண் என்கிற கிரீடம் அழகுதான் என்றாலும் அவளை வெளியில் உள்ள சமூகம் கிள்ளி கொண்டேதான் இருக்கும்

கணவன்மார் கொஞ்சம் கைகொடுங்கள் உங்களுக்காக வாழ்ந்துகொண்டு இருக்கும் அந்த அன்பு பறவையை அரவணைத்து வைத்து கொள்ளுங்கள்

அன்பால் கொஞ்சுங்கள் சமையல் பணி பகிர்ந்து கொள்ளுங்கள்

கைவலியோ உடல்வலியோ மனசு வலியோ புரிந்து கொள்ளுங்கள்

உங்கள் மகளை கவனிப்பது போல் மனைவியை கவனித்து கொள்ளுங்கள்

உடல் மனசு இரண்டையும் மென்மை படுத்துங்கள்

சமையலைப் பாராட்டுங்கள் அவள் சமையல் அறையில் பட்டு இருக்கும் வெப்பம் தொட்ட தழும்பு பாருங்கள் அவை உங்களுக்காக அவள் பட்ட அன்பின் சின்னம்

முடிந்தால் குட்டி முத்தம் கொடுங்கள் புண்ணும் இனிக்கும்

அவள் செய்வது சமையல் அல்ல அன்பின் அழகு தினசரி நன்றி சொல்லுங்கள்

குறுந்தகவல் மனைவிக்கும் அனுப்பலாம் அவள் குடும்பத்திற்காக எரியும் இன்னொரு மெழுகுவர்த்தி வாழ்க்கை முழுதும் கூட வரும் அன்பு தேவதை

கடவுள் நம்முடன் இருக்கமுடியாது என்பதற்காக கடவுள்கொடுத்த வரம் அன்னையும் மனைவியும்

அவளை கண்ணீர் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள் மூன்றாவது கையாக நீங்கள் இருங்கள்.

பெண் கண்ணீர் விட்டால் அங்கே செல்வம் தங்காது புரிந்து கொள்ளுங்கள்; வாழ்க்கை அழகாய் வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன?
  - ✓ 12,500
- புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் துவங்கிய ஆண்டு ?
  - ✓ 1886.
- இந்தியாவில் எவ்வளவு உயரம் வரையில் காற்றைப் பற்றிய புள்ளி விவரரத்தை அறிய இயலும் ?
  - ✓ 20 கிமீ
- க.்.பீன் இல்லாத ஊட்டச்சத்து பானம் எது அதை அறிமுகப் படுத்தியவர் யார்?
  - ✓ உர்ஸா இதனை அறிமுகப்படுத்தியவர் ரமேஸ் சவுகான் (பிஸ்லெரி நிறுவனத்தின் நிறுவனர்.
- அமெரிக்காவில் தேர்ந்து எடுக்கபட்ட ஒரே கத்தோலிக்க ஜனாதிபதி யார்?
  - ✓ ஜான் எப் கென்னெடி

## சில நபிமொழித் துளி:


- ஒரு முஸ்லிமைத் துன்புறுத்தியவன் என்னைத் துன்புறுத்தியவனாவான். என்னைத் துன்புறுத்தியவன் இறைவனைத் துன்புறுத்தியவனாவான். அந்நிய மதத்தினரை துன்புறுத்தியவன் என்னை (முஹம்மதை) துன்புறுத்திய வனாவான்.
- திருமணம் செய்ய வசதியிருந்தும் திருமணம் செய்யாதவன் என்னைச் சார்ந்தவன் இல்லை.
- பெற்றோரைக் கொடுமைப்படுத்தியவர் எதுநாள் வரை என்னிடம் மன்னிப்பு கேட்கவில்லையோ, அதுநாள் வரை அவர் பாவிகளின் கூட்டத்திலேயே சேர்ந்திருப்பார்.
- வெண்மையான ஆடைகளை அணியுங்கள். வெண்மையான ஆடை சிறந்ததாகும். அதனை மரணித்தவர்களுக்கு கபன் ஆடையாக அணிவியுங்கள்.
- சொர்க்கமும் நரகமும் உங்கள் பெற்றோர்களாகும். அவர்களுக்கு நல்லதைச் செய்தால் சொர்க்கத்தின் வாசலை அல்லாஹ் திறந்து விடுகிறான். நோவினைச் செய்தால் நரகம் தான் கிடைக்கும்.
- ஒருவன் தன் தந்தை மரணித்தபின் அவருடைய நண்பர்களுடன் உறவுகொள்வதே சிறந்த செயலாகும்.
- உங்கள் குழந்தைகளை முத்தமிடுங்கள். ஒவ்வொரு முத்தத்திற்கும் சொர்க்கத்தில் பதவி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோ**பால், விக்னேஷ் இருவரும் சிறுவயது முதலே நண்பர்கள். கல்லூரிவரை ஒன்றாகப் படித்தார் கள். கல்லூரியில் தங்களுடன் படித்த மோகி என்கிற பெண்ணை காதலித்தான் விக்னேஷ்.

இரு வீட்டிலும் கடுமையான எதிர்ப்பு. வேறு வேறு சமூகம் என்பதால் வெட்டுக் குத்து வரை போனது..! இருவரும் யாருக்கும் தெரியாமல் வடபழனி கோவி லில் திருமணம் செய்து கொண்டார்கள்.



கோபால்தான் வீடு பார்த்து கொடுத்தான். கோபால் அம்மா அவர் களுக்கு வேண்டிய உதவிகள் அனை த்தும் செய்து கொடுத்து பாதுகாப்பாக பார்த்துக் கொண்டார்.

வேலை விஷயமாக வெளிநாடு போனான் விக்கி. மனைவியை தன் நண்பன் கோபியிடம் பத்திரமாகப் பார்த்துக் கொள், நான் ஒருவருடம் கழித்து வந்து விடுகிறேன் என்று கூறி விட்டு சென்றான் விக்கி..!

ஆனால் விதி வெளிநாட்டில் விளையா டியது. ஆறு மாதங்கள் கழித்து கம்பெனியில் பாய்லர் வெடித்து இறந்து போனான் விக்கி. உடல் மிக மோசமாக சிதைந்து போனதால் இந்தியா கொண்டு வர இயலவில்லை.

விக்கியின் அண்ணன் அங்கு சென்று தம்பியின் உடலை அடக்கம் செய்துவிட்டு வந்து விட்டான். மனைவி மோகிக்கு உலகமே இருண்டு விட்டது. என்ன செய்வது இனி..!

கோபியின் அம்மா நீ எங்களோடு இருந்துவிடு என்று கூறி மகள் போல் கவனித்துக் கொண்டார்.பதினைந்து வருடங்கள் ஆயிற்று..!

## நம்பத்தகுந்த நண்பன்

கோபியும் திருமணம் வேண்டாம், புதிதாக வரும் மனை விக்கு மோகியை பிடிக்காமல் போகலாம். அது நண்பனுக்கு செய்யும் துரோகம் என்று கூறி கட்டாயமாக மறுத்து விட்டான்.

அம்மா அவனை தனியே அழைத்து மோகியை திருமணம் செய்து கொள் என்றார் அதற்கு அம்மாவை திட்டிவிட்டான். மோகியும் சொல்லி ப் பார்த்தாள் அதற்கும் அவன் மசிய வில்லை..

நண்பன் மனைவியை பூ போல, புனிதமாக கருதி நன்கு கவனித்து வருகிறான் கோபி..!

தன் நண்பன் பார்த்துக்கோ என்று சொல்லி விட்டுப் போனான்..! காவலாக இருந்து பாதுகாக்கிறான் கோபி..!! நட்பின் இலக்கணம் இது தானோ..?

முக நூல் தத்துவம்:

**துடிக்கின்ற இதயத்தை விட நடிக்கின்ற இதயங்கள் தான் அதிகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கா**தல் பாடல்களைக் கேட்டு மனதில் காமத்தை வளர்க்காதே !

திரைப்படங்களை பார்த்து தீமைகளை செய்யாதே !

இறைவனை மறந்து உலக இன்பங்களுக்கு அடிமையாகாதே !

மரணம் உன்னை சுவைத்தே தீரும் என்பதை மறக்காதே !

ஆதமின் மகனே! ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதே !

ஏனெனில் நாளை நீ மண்ணறைக்குச் சொந்தமானவன் என்பதை மறக்காதே !

மனிதனே ! விதவிதமாக உணவுகளை

உண்டாயே !

நாளை மண்ணறைக்குள் உன் உடம்பை புழுக்கள் உண்ணும் என்பதை

நினைத்தாயா ?

ஆதமின் மகனே! உதவிகள் செய்வதை வெறுத்து ஏழைகளை விரட்டியடித்து ஆணவமாக உலகில் வாழாதே !

மரணம் உங்கள் முன் என்பதை

மறக்காதீர்கள்.

பேரம் பேசி பாவங்களை செய்யும் மனிதனே !

படைத்தவன் உன்னை பார்த்த வண்ணமாக இருக்கிறான் என்பதை மறந்து விடாதே !

மனிதனே உன்னை இறைவன் மரணத்திற்கும், மறுமைக்கும் ஏற்ப படைத்துள்ளான் என்பதை மறக்காதே !

என் அருமை இஸ்லாமிய நெஞ்சங்களே!

ஈடேற்றம் பெறுவோம் மார்க்கத்தை தேடுவோம்.
மார்க்க விடயத்தில் ஒவ்வொருவரும் தமது மன இச்சைகளுக்கு இடம் கொடுக்காது சரியான பாதையைத் தேடி அதற்கு அமைவாக தமது வாழ்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மறுமையே நமது இலக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது உலக அதிசயம்?

உலகின் புதிய ஏழு அதிசயமாக அறிவிக்கப்பட்டவற்றின் பட்டியல் இதோ:

**1. இந்தியாவின் தாஜ்மஹால்.**

**2. சீனப் பெருஞ்சுவர்.**

**3. ஜோர்டானின் பெட்ரா.**

**4. பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் மலை உச்சியில் உள்ள பிரமாண்ட இயேசு நாதர் சிலை.**

**5. பெருவின் மச்சு பிச்சு.**

**6.மெக்ஸிகோவின் மாயன் கட்டிடங்கள்.**


**7. ரோம் நகரின் கொலீசியம்.**

இவைகள் நாமாகவே உருவாக்கியதும், அடிக்கடி மாற்றி கொள்கிறவைதான். இது அதிசயமா?

ஸம் ஸம் (ZAM ZAM water) நீரின் அற்புதத் தன்மைக் கண்ட விஞ்ஞானி கள் அதிர்ச்சியில் உறைந்தனர் என்றால் மிகையில்லை.

5 ஆயிரம் வருட பாரம்பரியம் கொண்ட இக்கிணற்று நீரை, உலகில் வாழும் பெரும்பாலான முஸ்லிம்கள் அருந்தா மல் இருந்திருக்க மாட்டார்கள். மக்கா விற்கு உலகின் பல தேசங்களில் இருந்து புனித பயணம் வரும்

முஸ்லிம்கள் இந்த கிணற்று நீரை குறைந்தது 20 லிட்டராவது தனது நாட்டிற்கு எடுத்து கொண்டு செல்லாமல் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட அற்புதமான இந்த ஸம் ஸம் கிணற்றை பற்றி இங்கு காண்போம்.



'ஸம் ஸம்' என்றால் நில் நில் என்று அர்த்தம். சென்ற நூற்றாண்டில், ஒரு முறை ஐரோப்பிய மருத்துவர்கள், சுகாதாரத்திற்காக இந்தகிணற்றினை சுத்தப்படுத்த வேண்டும் என்று சவுதி அரசுக்கு ஆலோசனை கூறினர்.

இதை ஏற்றுக்கொண்ட சவுதி அரசு 8 அதி நவீன ராட்சத பம்பு செட்டுளை கொண்டு தொடர்ந்து இரவும் பகலுமாக

15 நாட்கள் இந்த நீரை இறைத்தது. ஆனால் நீரின் அளவு குறையவில்லை! மாறாக நீரின் மட்டம் ஒரு அங்குலம் உயர்ந்து இருந்தது! ஒரு வினாடிக்கு சுமார் 8000 லிட்டர் என்ற அளவில், தினமும் 691.2 மில்லியன் லிட்டர் தண்ணீரை இடவேளையின்றி ராட்சத மோட்டார்கள் மூலம் இந்த கிணற்றி லிருந்து உறிஞ்சப்படுகிறது.

நல்ல நீர் வளம் உள்ள ஒரு பெரிய கிணற்றில் ஒரு வருடம் எடுக்கும் அளவு நீரை, ஒரே நாளில் 'ஸம் ஸம்' கிணற்றி லிருந்து எடுக்கப்படுவது மிகப்பெரிய அதிசயம்! அதைவிட அதிசயம் 691.2 மில்லியன் நீரை தினமும் எடுத்தபோதும் இதன் அளவு குறைவதில்லை! சுவை யும் மாறியதில்லை! ஹஜ் காலத்திலும் ரமழான் மாதத்திலும் சுமார் 20லட்சம் மக்கள் அங்கே குழுமுகிறார்கள். அனைவருக்கும் இந்தக் கிணற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தான் குடிநீர் வினியோகிக்கப் படுகிறது. குறைந்த ஆழம் உள்ள இந்தக் கிணறு, பாலைவனத்தில் அமந்துள்ளது.

இக்கிணற்றுக்கு அருகில் ஏரிகளோ கண்மாய்களோ குளம் குட்டைகளோ இல்லை! அந்தக் கிணற்றில் இருந்து எப்படி லட்சோப லட்சம்மக்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது என்பது முதலாவது அற்புதமாகும்,!

எந்த ஊற்றாக இருந்தாலும் சில/பல வருடங்களிலோ செயலிழந்து போய் விடும். ஆனால் இந்த ஊற்று பல ஆயிரம் ஆண்டுகளாக வற்றாமல் இருப்பது இரண்டாவது அற்புதமாகும்.

ஸம் ஸம் கிணறு அருகே எந்த தாவரமும் வளருவதில்லை. எந்த ஒரு நீர் நிலையாக இருந்தாலும் பாசி படிந்து போவதும், கிருமிகள் உற்பத்தியாவதும் இயற்கை. இதனால் தான் குளோரின் போன்றமருந்துகள் நீர் நிலைகளில் கலக்கப்படுகின்றன.

ஆனால் ஜம்ஜம் தண்ணீரில் அது உற்பத்தியான காலம் முதல் இன்று வரை எந்த மருந்துகள் மூலமும் அது பாதுக்காக்கப்படாமல் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது மூன்றாவது அற்புதமாகும்!

மருந்துகளால் பாதுகாக்கப்படாத தண் ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இருக்காது என்பது அறிவியலின் முடிவாகும். ஆனால் இந்தத் தண்ணீர் 1971-ம் ஆண்டு ஐரோப்பிய சோதனைச் சாலை யில் சோதித்துப் பார்க்கப்பட்ட போது இது குடிப்பதற்கு மிகவும் ஏற்ற நீர் என்று நிரூபிக்கப்பட்டது.

பூமியிலுள்ள நீரில் மிகச்சிறந்தது 'ஸம் ஸம்' நீர் என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார்கள். பொதுவாக மற்ற நீரில் இருந்து ஜம்ஜம் தண்ணீர் வேறுபட்டு ள்ளதும் சோதனையில் தெரிய வந்துள்ளது. கால்ஷியம் மற்றும் மெக்னீஷியம் எனும் உப்பு மற்ற வகை தண்ணீரை விட ஜம்ஜம் தண்ணீரில் அதிகமாக உள்ளது. இந்த உப்புக்கள் புத்துணர்ச்சியைக்கொடுக்கக் கூடியவை. இதை அனுபவத்தில் உணரலாம்.

மேலும் இந்தத் தண்ணீரில்ஃ புளோரைடு உள்ளது. இது கிருமிகளை அழிக்க வல்லது. அங்கே அற்புதம் நடக்கிறது. இங்கே அற்புதம் நடக்கிறது என்றெல்லாம் பலவாறான நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகிறது. அது போல் இதையும் கருதக்கூடாது.

மற்ற அற்புதங்கள் எல்லாம் எந்த சோதனைக்கும் உட்படுத்தப்படாதவை நிருபிக்கப்படாத நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் தினசரி 20 லட்சம் மக்களுக்கு அந்தத் தண்ணீர் குடி நீராகப் பயன்படுவதும், பாலைவனத்தில் இந்த அதிசயம் பல்லாயிரம் ஆண்டுகளாக நடந்து வருவதும் எல்லாவித சோதனைக்கும் உட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டும் உள்ளதால் இது மெய்யான அற்புதமாகும். இது போன்ற அற்புதம் உலகில் இது ஒன்றுதான் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

குறிப்பு - மற்ற தண்ணீர் பிடித்து வைத்தால் சில நாள்களில் கிருமிகள் தென்படும்.

ஆனால் அல்லாஹ்வின் அற்புதத்தால் கிடைத்த ஜம்ஜம் தண்ணீர் எத்தனை வருடம் பிடித்து வைத்தாலும் கெடுவ தில்லை இதுவும் ஓர் அதிசஎயம்தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதமொரு இணையம்..

இன்றைய யுகத்தில் மனித வாழ்க்கையோடு பிண்ணிப் பிணைந்த ஒரு வசதியாக காணப்படும் இண்டர்நெட் மூலம், பல அரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டும் விதமாக எமது "மாதமொரு இணையம்" பகுதி இங்கே வழங்கப்படுகின்றது.

## 01 இம்மாத இணையம் : www.eastlankaa.com

நவீன தொழில்நுட்பங்கள் மூலம், கிழக்கு மண்ணின் வர்த்தக மற்றும் ஏனைய தொடர்புகளை இலகுபடுத்தி மக்களை இணைத்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதனை நோக்காக கொண்டு செயற்படும் இத் தளத்தில் பல அரிய தகவல்கள் காணப்படுகின்றன.

சிறுவிளம்பரங்கள், வேலைவாய்ப்புகள், தொடர்பு விபரங்கள், இணைய இணைப்புக்கள் என ஒரு தகவல் திரட்டாக காணப்படும் இத் தளத்தில், ' உங்களது சிறு விளம்பரங்களையும் இலவசமாக வட்ஸ்அப், பேஷ்புக், ஈமெயல் வசதிகள் மூலம் அனுப்பி வைக்க முடியும். மேலும், ஒரு சிறிய கட்டண அடிப்படையில், விஷேட விளம்பரங்களையும் பிரசுரிக்க முடியும்.

இதிலுள்ள தகவல்களை, பிரதேசவாரியாக, ஏனைய தலைப்பு வாரியாக, இலகுவாக தேடிப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், இன - மத - மொழி வேறுபாடு கடந்து கிழக்கிலங்கை யினை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு தளங்களிலும் பயணித்துக் கொண்டிருக்கும் சிறந்த ஆளுமைகளை அடையாளப்படுத்தவும், புத்துருவாக் குனர்களை ஊக்குவிக்கவும், அனைத்து தரப்பினருக்குமான சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கவும் கூடிய வகையில், இத்தளத்தைப் பற்றிய அறிமுக தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்தளத்திற்கான உங்கள் Like யினை வழங்க :
www.facebook.com/eastlankaa

"நீயுமோர் - கம்ப்யூட்டர்ஜாதி ஆகிப்பார்..
உனது இதயம் மாத்திரம்,
உன்னைவிட்டுப் பிரிந்து சென்று,
உலகம் சுற்றிப் பார்த்துவிட்டு வரும்.."

— [illegible]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி ஜாமி-அதுல் பலாஹ் அதிபர் மௌலானா மௌலவி "ஷைகுல் பலாஹ்" எம்.ஏ. அப்துல்லாஹ் ரஹ்மானி அவர்கள் தென்னிந்தியா தஞ்சை மாவட்டம் அதிராம் பட்டினத்தில் 21.03.1932 இல் பிறந்தார்கள்.

இவர்களின் தந்தை அல்லாமா அல்ஹாஜ் முகம்மது அபூபக்கர் ஆலிம் ஆவார்கள். இப்பெரியார் 1950 ஆம் ஆண்டு முதல் 1954 ஆம் ஆண்டு வரை மஹரகம மத்ரஸதுல் கபூரிய்யா அரபுக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார்கள்.

1955 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை அட்டாளைச்சேனை ஷர்க்கியா அரபுக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி பின்னர் இந்தியாவில் கீழ்க்கரை காயல்பட்டினம் போன்ற இடங்களில் கல்விப் பணியாற்றினார்கள்.

தந்தை அபூபக்கர் ஆலிம் ஷாஹிப் போன்று தனயனான மௌலானா மௌலவி அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்களும் ஆலிமாக வெளிவருவதற்காக சொந்த ஊர் அதிராம்பட்டினத்தில் மத்ரஸதுல் ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் சேர்ந்து மார்க்க கல்வி கற்று 01.04.1954 ஆம் ஆண்டு ரஹ்மானி பட்டத்துடன் மத்ரஸா வாழ்க்கையை முடித்து வெளியேறினார்கள்.

ஆசிரியராக அதிராம் பட்டினம் அல் மத்ரஸதுல் ஸலாஹிய்யாவில் அதிபராகப் பதவி ஏற்று நான்கு ஆண்டுகள் நடத்தினார்கள். அதன் பின்னர் தனது தந்தையுடன் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் 03.05.1958 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து அட்டாளைச்சேனை அரபுக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

பின்னர் 05.01.1955ல்இல் ஆரம்பிக் கப்பட்ட காத்தான்குடி மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கல்லூரிக்கு தகுந்த விரிவுரையாளர் தேவைப்பட்டதால் மௌலானா மௌலவி அல்ஹாஜ் எம்.ஏ. முஹம்மது அப்துல்லாஹ் (ரஹ்மானி) அவர்கள் 13.10.1959 ஆம் ஆண்டு உப அதிப ராக காத்தான்குடி மத்ரஸதுல் பலாஹ் வில் கடமையைத் தொடர்ந்தார்கள். இவர்களது அயராத முயற்சியினால் காத்தான்குடியின் கண்ணாக மத்ரஸதுல் பலாஹ் இலங்கை முழுவதும் ஒளி வீசத்தொட ங்கியது. இலங்கையில் முதலாவது அல்-குர்ஆன் மனன "ஹிப்ழ்" வகுப்பு மத்ரஸதுல் பலாஹ்வில்தான் 18.12.1971



(ஆக்கம்: ஏ.எல்.டீன்பைரூஸ்)

இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வகுப்பை தென் இந்தியா காயல் பட்டினத்தைச் சேர்ந்த மர்ஹூம் மௌலானா மௌலவி அல் ஹாபிழ் ரீ.எம்.கே. செய்யித் அஹ்மத் (முத்து வாப்பா) ஆலிம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்த "ஹிப்ழ்" பணிக்காக அதிபர் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் சம்மாந்துறையைச் சேர்ந்த மௌலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாபிழ் ஏ. ஹஜ்ஜி முஹம்மத் அவர்களை நியமித்தார்கள்.

இவர்களின் அயராத முயற்சியின் காரணமாக 1975 ஆம் ஆண்டு அல்குர் ஆனின் 6666 வசனங்களையும் மனனம் செய்த முதலாவது ஹாபிழ்கள் குழு பட்டம் பெற்று வெளியேறினார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சினால் 17.11.1959 இல் இம் மத்ரஸா பதியப்பட்டு 1983 ஆம் ஆண்டு இக் கல்லூரி மத்ரஸதுல் பலாஹ் என்ற பெயரை மாற்றி "ஜாமிஅதுல் பலாஹ்" எனும் பெயரில் உயர்கலாபீடமாக மாற்றப்பட்டது.

அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் அதிராம் பட்டினம் செ.மு.க.நூறு முஹம்மது மரைக்காயர் அவரகளின் புதல்வி உம்முல் பஜ்ரியா அவர்களை 02.09.1961 ஆம் ஆண்டு மணமுடித்தார் கள்.

இந்த இனிய வாழ்வில் மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். முறையே மூத்த புதல்வர் முஹம்மது ரஹ்மதுல்லாஹ். முஹம்மது முஸ்தபா மூன்றாம் மகன் முஹம்மது பறக்கத்து ல்லாஹ் ஆவார்கள். தனது மூத்த புதல்வர் முஹம்மது ரஹ்மதுல்லாஹ் வையும் இளைய புதல்வர் பறக்கத்து ல்லாஹ்வையும் காத்தான்குடி ஜாமி அதுல் பலாஹ்வில் கல்வி பயில வழி செய்தார்கள். அதன் பிரதிபலிப்பாக 1991 ஆம் ஆண்டு ரஹ்மதுல்லாஹ் மௌலவி பட்டம் பெற்று பின்னர் வாழைச்சேனை "குல்லியதுன் நஹ்ஜதில் இஸ்லாமிய்யா" அரபுக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்று கின்றார்.

இரண்டாவது மகன் முஸ்தபா மரணமடைந்துவிட்டார். மூன்றாவது மகன் முஹம்மது பறக்கத்துல்லாஹ் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இயங்கும் "ஜாமிஆ மதீனத்துல் இல்ம்" கல்லூரியில் அல்ஹாபிழ் பட்டம் பெற்று காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ்வில் மௌலவி பட்டப் படிப்பைத் தொடர்ந்து இதே கல்லூரியில் போதனாசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

55 வருட காலமாக பெற்ற தாயை பிறந்த பொன்னாட்டை உற்றாரை உறவினரை சுற்றத்தாரை நண்பர்களை பிரிந்து கடல் கடந்து வந்து கல்விப் பணியாற்றிய அன்னார் சொந்த ஊரில் தங்கிவாழ்ந்த காலம் கொஞ்சம்தான்.

தலைநகர் கொழும்பு 2 ஆம் குறுக்குத் தெரு சம்மாங்கோட்டார் "ஜாமிஉல் அழ்பர்" பள்ளிவாயலைக் கட்டுவதற்கு நிலம்கொடுத்து அதனை அழகாகக் கட்டி முடித்தபெருமை அப்துல்லாஹ் ஹஸ்ரத்தின் பாட்டனார் அப்துல் காதிர் ஆலிம் ஸாஹிப் அவர்களையே சாரும். இந்தப் பரம்பரையினர் இன்றுவரை இப்பள்ளியை நிருவகிப்பதும் அப்துல் லாஹ் ஹஸ்ரத் அவர்களும் இப்பள்ளி யில் பிரதான நிருவாகியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்நாளை ஜாமிஅதுல் பலாஹ் வின் சேவைக்காக அர்ப்பணித்த அற்புத மனிதரான ஹஸரத் அவர்களிடம் கல்வி கற்று 2015 வரை 404 மௌலவிமார் களும் 387 ஹாபிழ்களும் வெளியேறி யுள்ளனர் வெளியேறிய அனைத்து பலாஹிகளும் அவரிடமே கல்விகற்ற வர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மதிப்புள்ள மகான் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் இலங்கை மண்ணில் ஆற்றிய பணிகளைச் சமுதாயம் மறந்துவிட முடியாது.

இவர்களின் தன்னிகரற்ற பணிகளால் இக்கல்லூரி பெரு வளர்ச்சி கண்டிருப்பதை யாவரும் அறிவர். இரவு பகலாக இதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாமிஆவின் அதிபராக இருப்பதுடன் காத்தான்குடி நகரை இஸ்லாமிய நெறிமுறையில் வழிநடாத்தும் தலைவ ராகவும் இலங்கை முழுவதிலும் வாழும் மக்களால் மதித்துப் போற்றப்படும் ஒரு பெரியாராகவும் விளங்குகிறார்கள்.

காத்தான்குடி மக்களின் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கு கொண்டு பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை சுமுகமாகத் தீர்த்து வைத்து ஒரு சமாதானத் தூதுவராகச் செயற்படு கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இலங்கையின் பல பகுதிகளிலும் சமய விழாக்களுக்கும் அறபுக் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழாக்களுக்கும் இவர்கள் அழைக்கப் பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். இலங்கையில் புதிய தொழுகை நேரம் அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் எழுந்தபோது இவர்கள் தலையிட்டு அதனை சுமுகமாகத்தீர்த்து வைத்ததால் இலங்கை முழுவதிலும் புதிய தொழுகை நேரம் அமுல்படுத்தப்பட்டது.

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவும் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங் கள் சம்மேளனமும் தொடர்ந்து சிறப்பாகச் செயற்படவேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டு அவற்றின் ஆலோசகராக விளங்கி தமது மேலான ஆலோசனைகளால் அவற்றை வழிநடாத்தி வருகிறார்கள். பணிவும், தன்னடக்கமும் ஷைகுல் பலாஹ் அவர்களிடம் இயற்கையாகவே அமை ந்து விட்ட பண்புகள். எல்லோருடனும் அன்பாகப் பேசி, சாந்தமாக அளவளாவி அனைவர் மனத்தையும் கவர்ந்துவிடும் தனிச்சக்தி இவர்களிடம் உள்ளது.

இஸ்லாமிய மார்க்க அறிவில் ஆழ்ந்த புலமை மிக்க இவர்கள் தமது மாணவர் களைத் தேர்ந்த அறிஞர்களாகவும் உயர்ந்த ஒழுக்க சீலர்களாகவும் ஆக்குவதில் மகத்தான பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

**காத்த நகர் முத்து மறைந்தது..**

**காத்தான்குடி மக்களின் மதிப்புக்குரிய சங்கைக்குரிய " ஷைஹுல் பலாஹ் " அப்துல்லாஹ் றஹ்மானி (பெரிய ஹஸ்ரத்)**

**காத்த மண்ணுக்கு தீன் ஒளி வீச வந்த முத்து..**

**தான் பிறக்கா இம் மண்ணை உயிராய் மதித்த மா மனிதர்..**

**உடன் பிறவா இம் மக்களின் உள்ளத்தில் குடியமர்ந்த உன்னத மனிதர்...**

**படைத்தவனின் வசனங்களை மனித உள்ளத்தில் புகுத்தி பல நூறு ஹாபிழ்களை உருவாக்கிய இறை சேவகர்...**

**நீதி, நேர்மை, சமாதானம், ஒழுக்கம் என்பவற்றின் உதாரண புருஷர்..**

**எங்கள் உயிரில் கலந்த சங்கைக்குரிய " ஷைஹுல் பலாஹ் " அப்துல்லாஹ் றஹ்மானி (பெரிய ஹஸ்ரத்)**

**இறை அழைப்பை ஏற்று மீளா பயணம் நீங்கள் சென்றாலும் எந்நாளும் மீளும் உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்தில்..**

ஜுனைட்.எம்.பஹ்த் காத்தான்குடி.

ஷைஹுல் பலாஹ் அப்துல்லாஹ் றஹ்மானி (பெரிய ஹஸ்ரத்) அவர்களின் விரிவா வறலாறு அடுத்த மாத இதழில்

**எதிர் பாருங்கள்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வாழ்வில் கால் நூற்றாண்டு பதித்த பா.ம.உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்



AL Deen Fairoos
Dip.in Journalism. University of Colombo

அரசியல் வாழ்வில் கால் நூற்றாண்டு கால்பதித்த பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அல்ஹாஜ் எம்.எல்.ஏ. முஹம்மது ஹிஸ்புல்லாஹ்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் வரலாற்றில் முஸ்லிம் அரசியல் தலைமைகளில் ஒருவராக தனக்கென ஒரு தனியான இடத்தினை தக்க வைத்துக்கொண்ட பெருமையும், புகழும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் அவர்களையே சாரும்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ. முஹம்மது ஹிஸ்புல்லாஹ் தனிமனிதல்ல. அவர் ஒரு சமூகம் அவர் சமூகத்திற்காக ஆற்றிய மகத்தான பணிகளை வார்த்தைகளினால் பேசிவிடவோ சொற்களினால் எழுதி விடவோ முடியாது.

இலங்கை அரசியல் வரலாற்றில் சிறுவயதில் பாராளுமன்றம் சென்று சிறப்பான சேவைகள் செய்துகாட்டிய பாராளுமன்ற உறுப்பினர்களை கான்பது அரிது ஆனால் அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் மாத்திரம் விதிவிலக்கு எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றம் சென்றதே சிறுவயதினில்தான்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் உடைய அரசியல் வாழ்வு, அரசியல் பயணம், சமூகப்பணி, அவரின் வாழ்க்கை வரலாறு என்பன போன்ற பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியதாக அவர் தொடர்பான ஆக்கம் ஒன்றினை (மலர் வெளியீட்டுக்காக) அவசரமாக தருமாறு ஒரு படைப்பாளி என்னிடம் கேட்ட போது அது எனக்கு சாத்தியமாக தெரிய வில்லை என்றாலும் கொஞ்மாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தவற்றை எழுதி கொடுத்துவிட வேண்டும் என்ற மிகப்பெரிய அவா என்னிடம் இருந்தமையினால் இவற்றினை எழுதுகின்றேன்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வின் இருபத்தி ந்தாண்டுகளுக்கு மேலான அன்னாரது அரசியல் பயனத்தினை ஒரு ஆக்கத்தின் ஊடாக எழுதி முடித்துவிட முடியாது.

சகோதரர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பற்றிய விடயங்களை ஆழமாக,அழகாக எழுதுவதற்கு பலர் இருக்கின்ற நிலையில் மலர் குழுவினர் என்னை வேண்டிக் கொண்டதற்கிணங்க எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வைப் பற்றி நான் இரத்தின சுருக்கமாக இங்கு சில விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிய நிலப்பரப்பில் அதிகூடிய முஸ்லிம் மக்கள் வாழும் ஒரு அழகிய நகரம்தான் காத்தான்குடி. காத்தான்குடிக்கு என்று ஓர் அழகிய வலராறு உண்டு.

காத்தான்குடி மண் பல கல்வி மான்களை, புத்தி ஜீவிகளை, உலமாக்களை, பல சாதனையாளர்களை, பல்வேறுபட்ட தரப்பினரையும் பெற்றெடுத்துள்ளது. அந்தவகையில் அதற்கான பேரும் புகழும் காத்தான்குடி மண்ணுக்கே சொந்தம் என்று சொன்னால் அது மிகையாகாது.

காத்தான்குடியின் வரலாற்றில் அரசியல், ஆண்மீகம், பொதுப்பணி என பல்வேறுபட்ட துறைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி சாதனை படைத்து பலர் வாழ்ந்து மறைந்தாலும் அவ்வாறானவர்களை காத்தான்குடி சமூகம் ஒரு போதும் மறந்து விடவில்லை. அந்த வகையில்தான் கால் நூற்றாண்டு காலமாக காத்தான்குடி மண்ணில் அரசியல் பயணத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அன்று தொட்டு இன்று வரை பிரகாசித்துக் கொண்டிருப்பவர்தான் அல்ஹாஜ் எம்.எல்.முஹம்மது ஹிஸ்புல்லாஹ்.

**அல்ஹாஜ் எம்.எல்.ஏ.முஹம்மது ஹிஸ்புல்லாஹ் பற்றி..........**

இவர் 1962 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி (ஹிஜ்ரி 1382 ரமழான் மாதம் பிறை 06) பிரபல மார்க்க அறிஞர் மஹ்மூத் லெப்பை ஆலிம் அவர்களுக்கும் தாய் அலியார் பாத்திமா அவர்களுக்கும் 7 ஆவது மகனாக காத்தான்குடியில் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்.எல்.ஏ. முஹம்மது ஹிஸ்புல்லாஹ் வின் கல்வி நடவடிக்கைகள்......**

இவர் தனது ஆரம்பக் கல்வியை காத்தான்குடி மட்/அல்அமீன் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை காத்தான்குடி மத்திய மஹா வித்தியாலயத்திலும் (தேசிய பாடசாலை) பின்னர் அளுத்கம சாஹிறா கல்லூரியிலும் கற்றார். பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முடித்துக் கொண்ட இவர் இந்தியாவின் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் துறையில் (MA Degree) முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் திறமை.....**

அல்ஹாஜ் எம்.எல்.ஏ.முஹம்மது ஹிஸ்புல்லாஹ் பாடசாலை மாணவனாக இருக்கும் போதும் கூட மிகவும் திறமையான ஒரு மாணவனாகத் திகழ்ந்தார் மாத்திரமின்றி விளையாட்டு விழா, போச்சுப் போட்டி என பலதிலும் திறமையை காட்டுவதில் ஹிஸ்புல்லாஹ் திறமைசாலியாகத் திகழ்ந்தார்.

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் பொதுப்பணி......**

பாடசாலை முதல் பல்கலைக் கழகத்தில் கல்வியை தொடர்ந்திருந்த காலங்களில் கூட எம்.எல்.ஏ.முஹம்மது ஹிஸ்புல்லாஹ் அவர்கள் மக்கள் சேவகனாக பொதுப்பணிகள் செய்வதில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கினார்.

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் குணாதிசயம்........**

எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் மாணவனாக, வாலிபனாக இருந்த காலங்களில் அவருக்கு எதிரி என்று யாரும் இருக்கவில்லை நண்பர்கள் ஏராளம் பேர் இருந்தனர் அவர்கள் அத்தனை பேரையும் அன்புடன் அரவணைத்துக் கொண்டு புன்முறுவல் பூத்த முகத்துடன் பொதுப்பணி மற்றும் அரசியல் செய்யப் புறப்பட்டார் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்.

எம்.எல்.ஏ.எம்ஹிஸ்புல்லாஹ் என்றால் அழகானவர், அன்பானவர் அமைதியானவர், எல்லோருடனும் அன்பாக பழகக்கூடியவர், பேசக்கூடியவர் என்ற பெறுமதியான நற்பெயரினை சிறுவயதிலிருந்தே ஒரே நேரத்தில் பெற்றுக் கொண்ட பெருமை எம்.எல்.ஏ.எம்ஹிஸ்புல்லாஹ்வையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் திருமணம்......**

இவர் 1991.01.25 ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார் இவருக்கு 3 குழந்தைகள் 2 ஆண்பிள்ளைகள் 1 பெண்பிள்ளை என்பதும் குறிப்படத்தக்கது

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் அரசியல் பிரவேசம்**

மக்களுக்காக பணியாற்றிய எம்.எல்.ஏ.முஹம்மது ஹிஸ்புல்லாவுக்கு அரசியல் அதிகாரத்தினை கொடுத்து அழகு பார்க்க ஆசைப்பட்டது மட்டக்களப்பு வாழ் தமிழ் பேசும் சமூகம்.

அந்த வகையில் 1988 ஆம் ஆண்டு Kattankudy Divisional Council இல் இருந்து வடகிழக்கு மாகாண சபை தேர்தல் மூலமாக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார் ஹிஸ்புல்லாஹ். முஸ்லிம் சமூகம் அப்போது பயங்கரவாதத்தினால் அடக்கியொடுக்கப்பட்டு அடிமைப்பட்டிருந்த போது தான் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக மறைந்த மாபெரும் தலைவர் எம்எச்.எம்.அஷ்ரப் அவர்களுடன் ஒன்று சேர்ந்து ' லங்கா முஸ்லிம் காங்கிரசை ஸ்தாபித்து அக்கட்சியின் ஊடாக 1989 ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி மட்டக்களப்பினை பிரதிநிதித்துவப்படுத்திப் பாராளுமன்றம் சென்றார் ஹிஸ்புல்லாஹ்.

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் ஆபத்து நிறைந்த அரசியல் பிரவேசம்........**

பயங்கரவாதிகளின் மரணதண்டனை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சமூகத்தின் விடுதலைக்காக 1989ம் ஆண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்னும் பலம் பொருந்திய கட்சியினுடைய இளம் போராளியாக காத்தான்குடி மண்ணிலிருந்து இவர் களமிறங்கினார்.

1989 இல் இருந்து ஆரம்பித்த ஹிஸ்புல்லாஹ்வின் அரசியல் பயனம் மற்றும் பாராளுமன்றப் பிரவேசம் 2016 இன்றுவரை அன்னாரது பயணம் தொடர்கின்றது.

**முஹம்மது ஹிஸ்புல்லாஹ்வின் பதவிகளும் சாதனைகளும்......**

மக்களின் ஆணையோடு இலங்கைப் பாராளுமன்றம் சென்ற முஹம்மது ஹிஸ்புல்லாஹ் சுமார் 19 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததுடன் அங்கு அவர் பல்வேறுபட்ட அமைச்சுப்பதவிகளையும் பொறுப்பேற்று பதவி வகித்தமையானது அவருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது ஹிஸ்புல்லாஹ் தனது மாவட்ட மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் தபால், தொலைத்தொடர்பு மற்றும் தொடர்பாடல் பிரதியமைச்சராகவும்..

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரங்களுக்கானபிரதியமைச்சராகவும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சராகவும் இருந்து நாட்டு மக்களுக்காக பணியாற்றியுள்ளார்.
தற்போது புணர்வாழ்வு மீழ்குடியேற்ற இராஜாங்க அமைச்சராக இருந்து பணியாற்றுகின்றார்.

தேசத்திற்காக……
இவர் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி இஸ்லாமிய பெண் தாதிகள் தமது கலாசார மரபிற்கேற்ப உடையணிவதற்கான வாய்ப்பினை பெற்றுக் கொடுத்துள்ளார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவராக இருந்து பணியாற்றியுள்ளார்.
விமான நிலைய விமானப் போக்குவரத்து சபையின் தலைவராக இருந்து பணியாற்றியுள்ளார்.
இலங்கையில் முஸ்லிம் உலமாக்களுக்கான தனியான பல்கலைக் கழகம் ஒன்றினை உருவாக்கி சாதித்துள்ளார்.
முஸ்லிம்களின் 1500 வருடகால பூர்வீகத்தையும், வலராற்றுச் சான்றுகளையும் எடுத்துக் கூற காத்தான்குடியில் பூர்வீக நூதனசாலை ஒன்றினை உருவாக்கியுள்ளார்.
ஹிறாபௌண்டேசன் என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினை உருவாக்கி அதனூடாக நாடுபூராகவும் புதிய பள்ளிவாயல்கள் மற்றும் புதிய வீடுகளை அமைத்து நாட்டுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இப்படி ஏராளமான விடயங்களை நாட்டிக்காகவும், மக்களுக்காகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் செய்து வருகின்றார் என்பதனை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

மேலும் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தமது அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி காத்தான்குடி மண்ணின் அபிவிருத்திற்காக மாத்திரமின்றி சமூக மேம்பாட்டிக்காகவும் அவர் ஆற்றிவரும் மகத்தான பணிகள் தொடர்பிலான விடயங்களை வரலாற்றில் பதியப்படல் வேண்டும். இவற்றில் மிகவும் குறிப்பிடும் வகையில் சொல்வதாயின் கதீப்மார்கள் இமாம்கள் முஅத்தீன்கள் அரபு மத்ரசாக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் என பல தரப்பினரையும் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்காவிற்கான உம்ரா கடமையினை நிறைவேற்ற ஏற்பாடு செய்து உதவியமையானது இலங்கை வரலாற்றில் ஓர் சாதனையாகும்.

25 வருடங்களுக்கு மேலாக தனது அரசியல் பயணத்தை தொடரும் பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மது ஹிஸ்புல்லாஹ் சாதித்தவைகள் ஏராளமாக உண்டு அவற்றையெல்லாம் எழுதுவது என்றால் பல ஏடுகள் தேவை எனவே இத்துடன் சுருக்கிக் கொண்டு விடைபெறுகின்றேன்.

**பிறப்பு என்பது சம்பவமாக இருக்கலாம் ஆனால்**
**இறப்பு என்பது சாதனையாக இருக்க வேண்டும் என்பதற்கமைய....**
**சாதித்து காட்டிய செயல் வீரன் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா.......**

## நற்சிந்தனை:

**நீ செல்லும் வழி**
**சரியானதாக**
**சிறப்பானதாக**
**இருந்தால் உன்னை**
**பின்பற்றி வர பலர்**
**தயாராக இருப்பார்கள்**



## அலெப்போ அழுகிறது...

அலெப்போ அழுகிறது எம் உறவு
அழிகிறது...

அலெப்போவில் பிஞ்சுகள் அழும் சத்தம்
நெஞ்சை பிளக்கிறது..

பச்சைக் குழந்தைகள் வதைக்கப்படுவது
என் பார்வையை குருடாக்கிறது..

அலெப்போ உம்மத் செய்த தவறென்று
ஒன்று இல்லாமல் தண்டிக்கப்படுகிறது...

பரிதாபம் காட்ட யாரும் இல்லர்
வேடிக்கை பார்கிறது அரபு தேசம்..

கவலை கொள்ளா கலிமா மொழிந்த
உம்மத் எமது அலெப்போ உம்மத்.

இன்ஷா அல்லாஹ்·வெற்றிக்கான
உம்மத் திரு நபியின் உம்மத்..

துன்பத்தில் பொறுமையாய்
பிரார்த்தித்துவிடு வெற்றிக்காய்..

அலெப்போவில் அழும் சத்தம் அயல்
தேசத்து குருடர்களுக்கு செவிடர்களும்
புலனாகாது..

அனைத்தும் அறிவான் அல்லாஹ்
ஒருவன்..

வெற்றிக்காய் காத்திருப்போம் இன்ஷா
அல்லாஹ்..

ஜுனைட்.எம்.பஹ்த்
காத்தான்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் சிகரம் அப்துர் ரஹ்மான்

(மதியன்பன்)



மட்டக்களப்பு மாவட்டம் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் பிறந்த பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தன்னுடைய ஆரம்பக்கல்வியை புதிய காத்தான்குடி பதுறியா வித்தியாலயம் பின்னர் மட். புனித மிக்கேல் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் பின்னர் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தையும் நிறைவு செய்தார். காத்தான்குடி மத்திய கல்லூரியில் உயர்தரம் கற்றால் பொறியியல் பீடத்திற்கு செல்ல முடியாது என்றிருந்த நம்பிக்கையீனமான மனப்பதிவு இருந்த ஒரு காலப்பகுதியில் அப்பாடசாலையில் தன்னம்பிக்கையுடன் உயர்தரத்தை பூர்த்தி செய்த அவர் அக்கல்லூரியின் வரலாற்றில் அப்படசாலையில் இருந்து பொறியியல் துறைக்கு தெரிவான இரண்டாவது பட்டதாரி மாணவராகவும் இருக்கிறார்.

கண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையினை நிறைவு செய்த இவர் அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவிலும் தன்னுடைய மேற்படிப்பினை சிறிது காலம் மேற்கொண்டார். பொறியியல் துறையோடு சேர்ந்து முகாமைத்துவ கணக்கியல் துறையிலும் கற்ற இவர் அத்துறையில் தகைமையினையும் பெற்றுக்கொண்டார்.

படிக்கின்ற காலத்திலேயே புரட்சிகரமான சமூக கருத்துக்களை கொண்டிருந்த இவர் பல்வேறு பட்ட சமூக அமைப்புக்களுடன் இணைந்து பொதுச்சேவை செய்தார். அத்தோடு எழுத்துத் துறையிலும் கலைத் துறையிலும் மிகுந்த ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் கொண்டிருந்தார்.

க.பொ.த சாதாரண தரம் எழுதி முடித்ததன் பின்னர் நண்பர்களுடன் இணைந்து 1990 ஆம் ஆண்டு Islamic Student Association (ISA) எனும் அமைப்பினை உருவாக்கிய அவர் வர்த்தகத்தில் மாத்திரமே நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த காத்தான்குடி பிரதேச சமூகத்தின் மத்தியில் தீவிர கல்வி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டார். அக்காலப்பகுதியில் கல்வியில் நல்ல அடைவுகளை பெற்ற மற்றும் அதற்காக தொண்டாற்றிய மாணவர்களுக்கும் சமூக பிரமுகர்களுக்கும் அப்துர்ரஹ்மான் தலைமையில் இயங்கிய ISA அமைப்பு வருடா வருடம் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தது. இதன் மூலம் சமூகத்தில் கல்வி பற்றிய தேடலும் விழிப்புணர்வும் தீவிரமாக ஊக்குவிக்கப்பட்டது .

ஆங்கில மொழியில் தீவிர ஆர்வம் கொண்டிருந்த இவர் அதனை மாணவர்களுக்கு கற்பிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டினர். உயர்தரத்தில் கற்கும் போதே ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்காகவும் தெரிவு செய்யப்பட்ட இவர் பொறியியல் துறையில் பல்கலைக் கழகம் செல்வதற்கு முன்பாக பயிற்றுவிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

காத்தான்குடி பிரதேச மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழி ஆர்வம் மிக குறைவாக காணப்பட்ட காலப்பகுதியில் 'Easy way to English' எனும் விஷேட ஆங்கில பயிற்சி நெறியை தாமாக வடிவமைத்து அதனை அவராகவே முன்னின்று மாணவர்களுக்கு ISA அமைப்பின் ஊடாக கற்பித்தார் .

அக்காலப்பகுதியில் எராளமான மாணவர்கள் அப்துர்ரஹ்மானின் இந்த விஷேட ஆங்கில பயிற்சிகளில் கலந்து கொண்டதன் மூலமாக O/L பரீட்சைகளில் அதி சிறப்பு சித்திகளை பெற்றுக்கொண்டனர்.

2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றினை இலங்கை அரசாங்கம் செய்து கொண்டிருந்த வேளை அதனைக் கண்காணிப்பதற்கான மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க தரப்பு பிரதிநிதியாக அப்துர் ரஹ்மான் நியமிக்கப்பட்டார்.

அக்காலப்பகுதியில் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து அதிகம் கவலை கொண்டிருந்த அவர் வாழைச்சேனை மற்றும் மூதூர்ப் பிரதேசங்கள் புலிகளால் தாக்கப்பட்ட வேளையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் தமது கடமையை செய்யத் தவறிவிட்டனர் என்பதனை பகிரங்கமாகத் தெரிவித்து மக்களுக்காகக் குரல் கொடுத்தார். பிரச்சினைகள் தீவிரமடைந்த போது அவற்றை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்துவதற்காக தனது பதவியினை இராஜினாமாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். அக்காலப்பகுதியில் இவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொண்ட கண்காணிப்புக்குழு" உறுப்பினராக அப்துர் ரஹ்மான் மட்டுமே காணப்பட்டார். 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பேரழிவின் போது இவரது தலைமையில் இயங்கிய CTR என்ற அமைப்பின் புனர்வாழ்வு மீள் குடியேற்ற பணிகள் மகத்தானவை. தன்னிடம் எந்த அரசியல் அதிகாரமோ அல்லது அரச உயர்பதவிகளோ இல்லாத போதிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நூறு வீடுகளை கொண்ட மாபெரும் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றினையும் இவரே முதன்முறையாக காத்தான்குடி பிரதேசத்தில் அமைத்தார். இவரது தலைமையில் அமைக்கப்பட்ட இந்த மீள் குடியேற்ற கிராமம் ஒல்லிக்குள பிரதேசத்தில் சமாதான கிராமமாக இன்னும் திகழ்கிறது ".

இப்படி கல்வியிலும் பொதுப்பணியிலும் ஈடுபட்டுக் கொண்டே தன்னுடைய உயர்கல்வியினை சிறப்பாக முடித்துக் கொண்ட இவர் கடந்த 1999 ஆம் ஆண்டு British College of Applied Studies (BCAS) எனும் உயர் கல்வி நிறுவனத்தை கண்டியில் ஆரம்பித்தார். இதன் மூலம் பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்கு உயர்தரக் கல்வியினைத் தொடர்வதற்கு வழி சமைத்துக் கொடுத்ததுடன் இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிநாடு சென்று தொழில் செய்து பல இலட்சங்கள் உழைப்பதற்கும் பலகுடும்பங்கள் நிம்மதியாக வாழ்வதற்கும் காரணமாக உள்ளார். அது மட்டுமல்லாது அதிகமான அந்நியநாட்டு செலாவணியை நம்நாடு பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுத்துள்ளார்.

கண்டியில் ஆரம்பித்த இவரது உயர்கல்வி நிறுவனம் தற்போது கொழும்பு, கல்கிஸ்ஸை, யாழ்ப்பாணம் குருநாகல் கல்முனை மட்டக்களப்பு என உள்நாட்டிலும் கட்டார் நாட்டிலும் வியாபித்து மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் எனும் தனிமனிதனின் கல்வி தொடர்பான தூர நோக்குடைய சிந்தனைக்காக இவருக்கு பல்வேறுபட்ட விருதுகள் அண்மைக்காலமாக வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக South Asian Partnership Summit எனும் அமைப்பினால் அண்மையில் தூர நோக்குள்ள தலைமைத்துவம் என்ற உயர் விருதொன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதனைப் போன்று அண்மையில் இந்தியா பெங்களூரில் Aryabhata International அமைப்பினால் இவருக்கு சிறப்பு உயர் விருதொன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு வழங்கப்படும் தனிமனிதனுக்கான விருதுகளை விட இவரது கல்வி நிறுவனத்திற்கு சிறப்பான உயர்கல்வியை வழங்கும் நிறுவனம் என்ற ரீதியிலும் அண்மைக்காலமாக பல்வேறு பட்ட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்படி இவர் கல்விக்காற்றும் சிறப்பான சேவைகள் நிறைந்திருக்க இவரது மற்றுமொரு சேவையான அரசியல் துறையினையும் சுருக்கமாக நோக்க வேண்டியிருக்கிறது.

சிறுவயதிலிருந்தே சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்பட்டு வந்த இவர் பல்கலைக் கழக காலத்தின் போது சமூக அரசியல் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டினார். எந்த ஒரு கட்சியின் உறுப்பினராகவும் அவர் தன்னை இணைத்துக் கொள்ளவிரும்பவில்லை ஆயினும் சமூக அரசியல் விவகாரங்களில் அப்போதே இருந்தே துணிச்சலுடன் குரல் கொடுத்தார். 1995ம் ஆண்டு காலப்பகுதில் அரசியல் தீர்வு முன்மொழிவுகளில் தென்கிழக்குக்கு வெளியில் உள்ள முஸ்லிம்கள் கைவிடப்படும் அபாய நிலை தோன்றிய வேளையில் அதற்கு எதிராக சிறிய புத்தகத்தை எழுதி வெளியிட்டு கிழக்கின் பல பகுதிகளுக்கும் சென்று பாரிய மக்கள் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினார். இதன் விளைவாக இறுதியில் அந்த முன்மொழிவுகள் கைவிடப்படும் நிலைக்கு அரசியல் தலைமைகளுக்கு அழுத்தம் கொடுத்தார்.

அரசியலில் இலஞ்சம், ஊழல், சுரண்டல், வெளிப்படைத்தன்மையின்மை போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்ததை கண்டு கவலை கொண்ட இவர் சமூக நலனை மாத்திரம் அடிப்படையாக்கொண்ட நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படையிலான மிக நேர்மையான அரசியல் ஒன்றினை உருவாக்க வேண்டும் அதன் மூலம் இந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் விமோசனத்தை உருவாக்கவேண்டும் என சிந்தித்து தன்னுடைய முக்கியமான நண்பர்களையும் முற்போக்கான சமூக சிந்தனையாளர்களையும் இணைத்துக் கொண்டு நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் எனும் ஒரு அரசியல் இயக்கத்தினை கடந்த 2006 ஆம் ஆண்டு உருவாக்கினார் சிறிய ஒரு அரசியல் அமைப்பாக தொடங்கிய இவரது இயக்கம் தான் கொண்டுள்ள நேர்மையான அரசியல் கருத்துக்கள் மற்றும் அதன் அடிப்படையிலான முற்போக்கான நடவடிக்கைகள் காரணமாக நாளுக்குநாள் வளர்ச்சியடையத் தொடங்கியது. அதன் வெற்றி முதலாவதாக களமிறங்கிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காத்தான்குடி நகர சபையில் ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம் நிரூபனமாகியது. இதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று மற்றுமொருமுறை போட்டியிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் வெற்றிபெற்று இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இவ்விரண்டு தேர்தல்களிலும் அப்துர் ரஹ்மான் நகர சபை உறுபினராகத் தெரிவு தெரிவு செய்யப்பட்டதோடு காத்தான்குடி நகரசபையின் எதிர்கட்சி தலைவராகவும் பணியாற்றினார். இது இவருக்கு சமூகத்தில் கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியைத் தழுவிக் கொண்ட இவர் மனம் தளராது தொடர்ந்தும் நல்லாட்சி அரசியலை இந்நாட்டில் முன்னெடுப்பதற்காக பாடுபட்டு வருகிறார்.

இதன் காரணமாக இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இயக்கம் தனது பிரதேசத்தையும் தாண்டி தேசிய மயமாக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இவரது இயக்கம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி என அடையாளப படுத்தப்பட்டது . தற்போது நாடளாவிய ரீதியில் பலராலும் பேசப்படுகின்ற இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இயக்கம் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நல்லாட்சி அரசைக் கொண்டு வருவதற்கு முதன்முதலில் கைகொடுத்த முஸ்லிம் இயக்கம் என்பதை யாரும் மறந்து விடமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் அரசியலில் தற்போது மிக வேகமாகப் பேசப்படுகிக்ற நல்லாட்சி என்ற சொல்லுக்கு உதாரணமாகத் திகழுகின்றவர்களும் இவர்கள்தான் என்பதும் இங்கு நினைவு படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

அத்தோடு இவரது நண்பர்களும் இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இயக்கத்தில் உள்ள அங்கத்தவர் களாலும் வழங்கப்படும் பெரும்பாலான பணத்தினைக் கொண்டு ஏராளனமான பொதுப்பணிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன தற்போதும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு கல்வியிலும் அரசியலிலும் பல்வேறுபட்ட உதவிகளையும் சேவைகளையும் செய்து வரும் இவர் தனது இயக்கத்தின் ஊடாக பெண்கள் பிரிவு ஒன்றினையும் உருவாக்கி பெண்களுடைய தேவைகளையும் அவர்கள் மூலமாக கேட்டறிந்து நிவர்த்தி செய்து வருகிறார். இதற்காக இவரது அமைப்பிலுள்ள பெண் அங்கத்தவர்களும் ஏராளமான தங்களது சொந்த நிதிப் பங்களிப்பினை செய்து வருக்கின்றனர்.

இப்படி இவர் பற்றி இன்னும் நிறைய இருக்கிறது சுருக்கமானதே இவையாகும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் ஹாஜ் முகம்மது ஷிப்லி பாறூக்

## (பொறியியளாலர்) (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)

### (ஏ.எல்.டீன்பைரூஸ்)



முழுப்பெயர்: முகம்மது பாறூக் முகம்மது ஷிப்லி

பிறப்பு: 1/01/1976

தந்தை: உதுமான் ஸாஹிப் முகம்மது பாறூக்

தாய்: ஜெயினுலாப்தீன் ஆயிஷா உம்மா

ஷிப்லி பாறூக் 4 பிள்ளைகளின் தந்தை மனைவி ஒரு வைத்தியர்

ஆயிஷா பாறூக் தம்பதிகளின் மூத்த மகனாக பிறந்த ஷிப்லி பாறூக் தனது ஆரம்ப கல்வியை காத்தான்குடி மட்/மெத்தை பள்ளி வித்தியாலயத்திலும், 6-11 வகுப்பு வரை காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் (தேசிய பாடசாலை) உயர் கல்வியை 1994 மாத்தளை ஸாஹிறா கல்லூரியிலும் கற்று பேராதனை பல்கலை கழகத்திற்கு பொறியியல் பீட மாணவனாக தெரிவாகி கல்வியை தொடர்ந்தார்.

பாடாசாலை முதல் பல்கலை கழகம் வரை ஒரு நல்லொழுக்கமுள்ள சிறந்த மாணவனாக திகழ்ந்தார் என்பதுடன் சிறுவயதிலிருந்தே மார்க்கப்பற்று ள்ளவராகவும் காணப்பட்டார சிப்லி பாறூக்..

2004ம் ஆண்டு பேராதனை பல்கலை கழகத்திலிருந்து மிகவும் திறமை மிக்க "பொறியியலாளராக" பட்டம் பெற்று வெளியேறினார்.

ஷிப்லி பாறூக்கின் திறமைக்கு ஏற்றாப்போல் சில ஆண்டுகள் கட்டார் நாட்டில் வேலை புரிந்தார் பின்னர் தாய் நாட்டிற்கு வந்து அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இனைந்து தொழில்புரிந்து வந்தார்-

மேலும் அவசியத்" தேவை காரணமாக Keyport Engineering Service என்ற Company யை ஆரம்பித்து இன்றுவரை அதனூடாக பலபல வேலைத் திட்டங்களை செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷிப்லி பாறூக்கின் அறிவுத்திறன் நேர்மை, மார்கப்பற்று போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோரன்ன விடயங்கள் அவரிடம் காணப்பட்டதால் அவரை பலரும் நேசித்தனர். அதிலும் விஷேடமாக அரசியல் பயணம் ஒன்று அவருக்காக காத்திருந்தது.

2012ஆம் ஆண்டு தற்போதைய இராஜாங்க அமைச்சர் MLAM Hizbullah வின் அரசியல் பயணத்தில் (பலரின் வேண்டுதலின், அழைப்பின் பேரில்) இனைந்து கொண்டு ஷிப்லி பாறூக் செயல்பட்டார்.

அரசியல்வாழ்வில் அரசியல் வாதிகள் இணைவதும், பிரிவதும் சகஜம் என்பதற்கேற்ப 2015 ஜனாதிபதி தேர்தலில் போது மஹிந்த எதிர் மைத்திரி களமிறங்கியபோது ஹிஸ்புல்லாஹ்வைவிட்டு பிரிந்து கொண்டனர். ஈற்றில் ஷிப்லி பாருக் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இணைந்து கொண்டு செயல்பட்டு வருகின்றார்.

ஷிப்லி பாறூக் என்ற ஒரு கல்விமானுக்கு அரசியல் அதிகாரம் வழங்கி அழகு பார்த்தவர் பெருமை இராஜாங்க அமைச்சர் MLAM Hizbullah வைதான் சாரும்.

ஆனால் ஹிஸ்புல்லா சிப்லி உறவு நீண்ட காலம் நிலைக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

ஷிப்லி பாறூக் தனது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அதிகாரத்தை பயன்படுத்தி இதுவரை 48 பேருக்கு அரசாங்க நியமனத்தை பெற்று கொடுத்திருக்கின்றமை பாராட்டத்தக்க விடயம்.

தமது 4 ஆண்டு பதவி காலத்தினுள் பல நூற்றுக்கணக்கான அரச உத்தியேகஸ்தர்களின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு உரிய திணைக்களத்தினூடாக தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தமையும் விசேட அம்சமாகும். அதே நேரம் தனது அதிகாரத்தை பயன்படுத்தி ஷிப்லி பாறூக் எந்த ஒரு நபருக்கும் அநீதியிழைக்கவில்லை என்பதும் போற்றப்பட வேண்டிய விடயமாகும்.

தனது மாகாண சபை நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி பிரதேச வேறு பாடின்றி நிதிஒதுக்கீடு செய்து சேவையாற்றுவது ஷிப்லி பாறூக்கின் அரசியல் வாழ்வில் ஒரு பாரிய வெற்றியாகும்.

பாடசாலைகள், பள்ளிவாசல்கள், குர்ஆன், அரபு மதரசாக்கள், வைத்திய சாலைகள், கால் நடை, வாழ்வாதாரம். சிறு தொழில் முயற்சி, மீன் பிடி என பல் வேறு பணிகளின் மேம்பாட்டிற்காக ஷிப்லி பாறூக் ஆற்றி வரும் சேவை பலரதும் பாராட்டை பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி பரீட் நகர் வீதி போடுவதில் பாரிய இழுபறி நிலை ஏற்பட்டபோது தனது சொந்த நிதியிலிருந்து சுமார் 6,000 000 இலட்சம் ரூபாய் (60×120) பெறுமதியான வீதியினை போட்டு மக்களிடம் கையளித்தமை மிகப்பெரிய சாதனையாக காத்தான்குடி பிரதேச மக்கள் போற்றுகின்றனர்.

காத்தான்குடி கடற்கரை 'Marrine Drive" வீதியினை மிக நேர்த்தியாக தொழில் நுட்பத்துடன் அமைத்து அழகுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஷிப்லி பாறூக்கின் முயற்சியால் பல சிறிய வீதிகள் பொருத்துக்கற்களாகவும், கிறவல் வீதிகள் கொங்றீட் வீதியாகவும் மாற்றம் பெற்று வருகின்றமை விசேட அம்சமாகும்.

காத்தான்குடி அபிவிருத்தி என்பது காலத்தின் தேவை எனக்கருதி தனது அறிவாற்றல் ஊடாக யாருடைய அழுத்தங்களும் இன்றி ஒரு மாகாண சபை உறுப்பினராக மாத்திரமின்றி வசதி படைத்த ஒரு பொறியியலாளராகவும் இருந்து சேவை செய்து வரும் ஷிப்லி பாறூக்கின் சேவையினை பாமரர் முதல் படித்த மக்கள் வரை ஒரு முறையும் பாராட்டாது இருந்ததில்லை எனலாம்.

மார்க்கத்தை அரசியலுக்கு ஏற்றால் போல் மாற்றி வந்த நிலையினை மாற்றி மணி அடித்தல், மாலை அணிதல்,இசைமுழக்கம், மாணவர்கள் கால் கடுக்க அரசியல் வாதிகளை காத்து நிற்றல் என்ற சம்பிரதாயங்களையெல்லாம் காத்த மண்ணில் தடுத்து நிறுத்திய பெருமை ஷிப்லி பாறூக்கையே சாரும்.

மக்கள் பணத்தினால் கட்டப்படும் பாடசாலை கட்டிடங்கள், வீதிகளுக்கு தனதும் தன்னுடைய உறவுகளின் பெயர்களை வைத்து நாடா வெட்டி நாடகமாடும் அரசியல் வாதிகளின் செயல்பாட்டினை மிக தைரியமாக எதிர்த்த ஒரு அரசியல் வாதி ஷிப்லி பாறூக் என்றால் மிகையானது.

சாதித்தது எது என்பதனை விட சாதிக்க துடிப்பது தான் அதிகம் என்றார் சிப்லி பாறூக்.

### படித்ததில் பிடித்தது:

**உலகில் மிகப் பெரிய துரோகம் ஒருவர் மீது பொய்யான அன்பு காட்டி அதை அவர்களிடம் உண்மையென நம்ப வைப்பதுதான்.**

**M.H.M Thasweer,
Qatar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவை வாழ்த்துகிறோம்

ஆலிம்கள் சார்பில் அஷ்ஷெய் அல்ஹாபிழ் எம்.கே.கே.அஹமட்(றஷாதி)
(ஏ.எல்.டீன்பைரூஸ்)

**"மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த மாட்டான்"**

நபிமார்களின் வாரிசுகளான உலமாக்களை கண்ணியப்படுத்துவதிலிலும், எந்த பிரதேசவாதமும், வேறுபாடுகளும் பாராது, அவர்களின் எதிர்கால நலன்களில் கூடிய கவனம் செலுத்துவதில் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் பணி மகத்தானது என அஷ்ஷெய் அல்ஹாபிழ் எம்.கே.கே.அஹமட்(றுஷாதி) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்......
இலங்கை வரலாற்றில் முஸ்லிம் உம்மாவுக்காக உழைத்த பல அரசியல் தலைமைகளையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் நாம் வரலாறுகளில் படிக்கமுடிகின்றது. அவைகள் யாவும் வரலாற்றுப் பதிவாகவே உள்ளன. அதே போன்று உலமாக்களின் எதிர்கால் இலக்கை மாத்திரம் நோக்கமாக கொண்டு உலமாக்களுக்கான தனியான பல்கலை கழகம் ஒன்றினை உருவாக்கி அதனூடாக உலமாக்களின் உயர்கல்விக்கு வித்திட்டது மாத்திரமின்றி உலமாக்கள் தொழில்நுட்ப ரீதியான துறையில் தங்களின் அறிவினை மேம்படுத்தி கொள்ளவும், அதன் வளர்ச்சியில் முன்னேற வழிவகுத்து அதற்காக சிந்தித்து செயலாற்றிய பெருமை சகோதரர் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவுக்கே சொந்தமானது என தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் கடமையான ஹஜ் என்ற வணக்கத்தினை வசதி படைத்தவர்கள் மாத்திரமே நிறைவேற்ற வேண்டும் என இஸ்லாம் பணித்திருக்கின்றது. ஹஜ் என்ற வணக்கத்தினை நிறைவேற்ற வசதியில்லாதவர்கள் உம்றா கடமையினை நிறைவேற்றுவதனூடாக தாங்கள் மன ஆறுதலினையும்,ஆத்ம திருப்தியும் அடைவதினை காண்கின்றோம்.

ஆனால், அந்த உம்றா கடமையினைக் கூட செய்ய வசதியில்லாதவர்களின் விடயத்தில் நாம் கவலை அடைகின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ் அந்த விடயத்தில் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தனது உயரிய சிந்தனையூடாக இலங்கை பூராகவும் இருந்து இறையில்லங்களில் பணியாற்றுகின்ற உலமாக்கள், ஹதீப்மார்,இமாம்கள், முஅத்தீன்கள், அறபு மதரசாக்களின் ஆசிரியர்கள் ஆகியோர்களை புனித உம்றா கடமையினை நிறைவேற்றுவதற்றகாக வேண்டிய "சகல ஏற்பாடுகளை செய்து கொடுத்தமையானது இலங்கை வரலாற்றில் இது சரித்திரமாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

இம்மகத்தான பணிகளை உயரிய நோக்கத்துடன் அல்லாவிற்காக வேண்டி மாத்திரம் செய்துகொடுத்த (விசேடமாக உலமாக்களுக்காக) இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கு நாம் எமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் உலமாக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் விடயங்களில் இருந்து வினா விடை போட்டி ஒன்று விரைவில் இடம்பெறும். எனவே இச் சஞ்சிகையில் படிப்பவற்றை பதிவு செய்து வைத்திருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஓர் ஆத்மாவை வாழ வைத்தவர்,**
**உலகையே வாழ வைத்தவர்**
**போலாவார்..** (திருமறை)

*தொடர்-1*

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு பயணத்திலேயே இருக்கின்றான். ஆனாலும் ஒரு சிலரே இலட்சியப் பயணங்களை மேற்கொள்கின்றார்கள்.

சாதாரண பயணம் செய்வோரின் கதை, பிறந்தோம் - வாழ்ந்தோம் - செத்தோம் என்று முடிந்துவிடுகின்றது.

ஆனால், இலட்சியப் பயணங்களை மேற்கொள்பவர்களின் வாழ்க்கை, பிறந்தோம் - வாழ்ந்தோம் - சாதித்தோம் என்று வரலாறாய் தொடர்கின்றது.

இப்பொழுது முடிவெடுங்கள்..

உங்கள் வாழ்க்கையை, வரலாறு ஆக்கப் போகின்றீர்களா..? அல்லது வந்த சுவடே தெரியாமல் முடித்துக் கொள்ளப் போகின்றீர்களா..?

ஆம்.. யார் உண்மையான சாதனையாளன்..?

- தனக்கென்று மாத்திரம் வாழ்பவனா..?
- தனக்காக இன்றி பிறருக்காக வாழ்பவனா..?
- தனக்காகவும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்காகவும் வாழ்பவனா..?

தனக்காக மாத்திரம் வாழ்பவன் - சுயநலவாதி

தனக்கல்லாது பிறருக்காக வாழ்ந்து மரணிப்பவன் - தியாகி

தனக்கும், தன்னை சுற்றியுள்ளவர்களுக்குமாக - சுயநலத்தைப் போன்றே பொதுநலத்தையும் பற்றி சிந்திப்பவனே உண்மையான சாதனையாளன். அவனுக்கே ஒரு சாதனையாளனாவதற்கான முழுமையான தகுதி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சுயநலவாதியை உலகம் ஞாபகம் வைத்துக் கொள்ளாது. அப்படி வைத்துக் கொண்டாலும் அவனால் விளைந்த தீமைகளையே பட்டியலிட்டிருப்பார்கள்.

ஒரு தியாகி, தன்னைப் போன்றே தன் குடும்பத்தையும் உறவுகளையும் கஸ்ட்டத்தில் விட்டுவிட்டே மரணித்து போயிருப்பார். நல் இதயங்கள் அவரது தியாகத்தை நினைவுகூரும்.

ஒரு சாதனையாளன், தானும் வாழ்ந்து பிறரும் வாழ வழி சமைத்திருப்பான். அவனைப் பார்க்கும் உலகமே உத்வேகம் (Inspiration) அடையும்.

ஆம்.. இன்றைய நவீன உலகின் வரலாற்றை எழுத, எல்லோருக்கும் முன்மாதிரியாய் வாழ்ந்து வழிகாட்டும் "ரோல் மொடல்" களே தேவை.

எமது சாதனை இலக்கு - ஆத்மீகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, மருத்துவம், பொறியில், தொழில்நுட்பம், சமூக மாற்றம் என எந்த துறையாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

எமது சிந்தனைகள் எமக்காக மட்டுமன்றி, எல்லோருக்குமாக சேர்த்து நல்லது செய்வதாக அமைந்தால், நாம் வாழ்ந்து வழிகாட்ட தயாராக இருந்தால் அதுதான் உண்மையான சாதனை.

ஆம்..

நீயும் வாழு..

அடுத்தவனையும் வாழவிடு..

உன்னால் முடிந்தவர்களுக்கு வாழ்க்கைகொடு..

**வாழு.. வாழ விடு.. வாழ்க்கை கொடு..**

*( Inspiration தொடரும் )*

learning for leading

LeeNaa College

2017 புதிய மாணவர்கள் அனுமதி

தரம் 1 தொடக்கம் 8 வரையுள்ள மாணவ, மாணவிகளுக்கான தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ஏனைய பாடங்கள்..


Taqwa Mosque Road, New Kattankudy - 03
Email : leenaacollege@gmail.com

076 700 91 33 ( விபரங்களுக்கு )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுத்த 6 பூண்டுகளை சாப்பிட்ட 24 மணிநேரத்தில் உடலினுள் ஏற்படும் அற்புதங்கள் பற்றி தெரியுமா?



பூண்டை வறுத்து சாப்பிட்டால், 24 மணிநேரத்தில் உடலினுள் அற்புதங்கள் ஏற்படும். இங்கு அந்த அற்புதங்கள் என்னவென்று கொடுக்கப்பட்டுள்ளது.

பூண்டு மிகவும் ஆரோக்கியமான உணவுப் பொருள் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த பூண்டுகளை அன்றாட உணவில் சேர்ப்பதுடன், அதனை பச்சையாக சாப்பிட்டால், உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம், உயர் கொலஸ்ட்ரால், இதய நோய்கள், மாரடைப்பு, பெருந்தமனி தடிப்பு போன்றவைகளை கட்டுப்படுத்தலாம்.

மேலும் பூண்டுகள் ஆன்ஜியோடென்சின் II என்னும் ஹார்மோன் உற்பத்தியைத் தடுக்கும் மற்றும் இரத்த நாளங்களை ரிலாக்ஸ் அடையச் செய்யும். பூண்டு உடலில் இருக்கும் கெட்ட கொழுப்புக்கள் கட்டுப்படுத்தப்படும்.

இத்தகைய பூண்டை வறுத்து சாப்பிட்டால், 24 மணிநேரத்தில் உடலினுள் அற்புதங்கள் ஏற்படும். இங்கு அந்த அற்புதங்கள் குறித்து தான் கொடுக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் எங்களது செய்திகளை உடனுக்குடன் படிக்க க்ளிக் செய்யவும்

## 1 மணிநேரம்

வறுத்த 6 பூண்டுகளை சாப்பிட்ட ஒரு மணிநேரத்தில், இரைப்பையில் செரிமானமாகி, உடலுக்கு சிறந்த உணவாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-4 மணிநேரம்

2-4 மணிநேரத்தில் பூண்டு உடலில் உள்ள ப்ரீ-ராடிக்கல்களை எதிர்த்துப் போராடும் மற்றும் உடலினுள் இருக்கும் புற்றுநோய் செல்களை அழிக்கும்.

## 4-6 மணிநேரம்

4-6 மணிநேரத்தில் உடலின் மெட்டபாலிசம் தூண்டப்பட்டு, உடலினுள் இருக்கும் அதிகப்படியான நீர்மம் வெளியேற்றப்படும் மற்றும் தேங்கியிருக்கும் கொழுப்புக்கள் கரைய ஆரம்பிக்கும்.

## 6-7 மணிநேரம்

பூண்டில் உள்ள ஆன்டி-பாக்டீரியல், இரத்த நாளங்களில் நுழைந்தப் பின், இரத்தத்தில் உள்ள பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கும்.

## 7-10 மணிநேரம்

இக்காலத்தில், பூண்டில் உள்ள சத்துக்கள் உடலால் உறிஞ்சப்படுவதோடு, பூண்டு உடலுக்கு நல்ல பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தும்.

## 10-24 மணிநேரம்

முதல் 1 மணிநேரத்தில் பூண்டு செரிமானமாகியப் பின், பூண்டு உடலை ஆழமாக சுத்தம் செய்யும் பணியை ஆரம்பித்துவிடுவதுடன், கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்களையும் செய்ய ஆரம்பிக்கும். அவையாவன:

கொலஸ்ட்ரால் அளவுகள் சீராக்கப்படும்.

தமனிகள் சுத்தம் செய்யப்படும் மற்றும் இதய நோய்களில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

இரத்த அழுத்தத்தை சீராக்கும்.

உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்தும்.

உடலினுள் கனமான மெட்டல்கள் நுழைவதைத் தடுக்கும்.

எலும்புகளின் வலிமை அதிகரிக்கும்.

அதிகப்படியான மருத்துவ குணத்தால், பூண்டு உடலில் உள்ள சோர்வைப் போக்கும்.


உடலில் உள்ள செல்களின் வாழ்நாளை நீட்டிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தல்

மதியன்பன்



இப்போது
தோணா என்ற பெயரையே
தோண்டிப் புதைத்து விட்டார்கள்
அப்போதெல்லாம்
அதில்தான் மீன் பிடிப்போம்.

மாலையானால்
தூண்டில் இரை சகிதம்
இடுப்புத் தண்ணிக்குள்
இறங்கி நிற்பதில் அலாதிப் பிரியம்.

தங்கூசில் தூண்டில் கட்டி
இரையும் குத்தி
இடையிலே மப்ளர் கட்டி
தூண்டிலை
இடம் பார்த்து வீசுவோம்

கண்ணிமைக்கும் நேரம்
மப்ளர் ஓடும் அங்கும், இங்கும்
மாட்டிக்கிட்டாங்க..
ஆவலோடு இழுத்தெடுப்போம்.

பனையான், விரால்
சுங்கான் கெழுத்தி குறட்டை என்று
சுண்டி இழுத்தால்
தூண்டிலில் தொங்கி வருவார்கள்.

மீன் பிடிக்கும் இரை
நாக்கிளிப் புழுக்கள்தான்
ஈரமண்ணைத் தோண்டி
இழுத் தெடுத்து
உசிரோடு துண்டு துண்டாக்கி
இரையாய் பயன்படுத்துவோம்.

அப்போதெல்லாம்
அருவருப்புத் தெரிவதில்லை
இலட்சியமே
மீன் பிடித்தல் ஒன்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனைக் கழற்றும் போது
சுள் என்று முள் குத்தும்
அப்போது
வலி தெரியாத சுகமொன்று
எம்மை வருடிச் செல்லும்.

களிசனை உடுத்துக் கொண்டு
சாரனை கையிலெடுப்போம்
சாரன்தான் எங்களுக்கு
வலையும், அத்தாங்கும்,
அதை வைத்துத்தான்
சின்ன மீன்களை சிறை பிடிப்போம்.

மாலை நேர மத்ரசா
டியூசன் வகுப்பு
எல்லாமே கட்டாகும்.

வீட்டுக்குச் சென்றால்
விருந்தென்பதால்
பிரவேசிப்பதெல்லாம்
பின் கதவால்தான்
எங்கள் வருகைக்கு முன்னரே
தகவல் வந்திருக்கும் வீட்டுக்கு..

பிறகென்ன...
கிடைக்கும் இரவுச் சாப்பாட்டோடு
தர்ம அடியும் சேர்ந்து கிடைக்கும்.
தழும்புகள்
தாறுமாறாய்
துடைகளில் தவமிருக்கும்.

அடிவலி தாங்கத்தான்
சாரனுக்குள் களிசன் போடுவது
அதையும் கழற்றச் சொல்லி
போனஸ் அடி கிடைக்கும்.

உம்மாவுக்கு
ஒத்தணம் போடுவதே தினமும்
ஓயாத வேலையாகிவிடும்..
இப்போதெல்லாம்
அப்படியொரு வாழ்க்கை
நினைக்க மட்டும்தான்..

**கவிதைத் துளி :**
என் முன்னால் எப்பொழுதும் சிரிக்கும் என் நண்பன்
முதன் முறையாக அழுகிறான் எழுந்து துடைக்க நினைக்கிறேன்
நான் இறந்து கிடப்பதையும் மறந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**(பைஸர் அமான்)**

தற்கால நாகரிக உலகிற்கு முகம் கொடுக்க கூடிய நமது பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் ஏனைய சமுகங்களுடன் ஒப்பிடுகையில் பல்வேறு விடயங்களில் பின்தங்கி காணப்படுகின்றனர். உதாரணமாக கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, உடற்பயிற்சி, பொழுதுபோக்கு அம்சங்கள் என்பனவற்றை பிரதானமாக குறிப்பிடலாம். மேல் குறிப்பட்டுள்ள விடயங்களில் ஒரு சிலவற்றினையாவது நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்ற ஒரு சமுக நோக்கம் இதுவரை எந்தவொரு ஊரின் பிரதான தலைமைத்துவங்களுக்கோ அல்லது பெண்களுடைய வாக்குகளை மாத்திரம் சுவீகரித்துக் கொள்ளும் எந்தவொரு அரசியல் கட்சிகளுக்கோ இருந்ததில்லை. நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்தான் முதன் முதலாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவற்றை தமது எதிர் கால செயற்றிட்டங்களில் ஒன்றாக உள்வாங்கியிருந்தது என்பதை மறுக்க முடியாது. அல்ஹம்துலில்லாஹ்.....


மேற்குறிப்பிட்ட விடயங்களில் மிக குறுகிய காலத்திற்குள் தீர்க்கப்பட வேண்டி முக்கியமான தேவையாக கல்வியினூடாக உருவாக வேண்டிய அல்லது உருவாக்கப்பட வேண்டிய ஒரு மருத்துவ வெற்றிடம் இருக்கின்றது. அதுதான் Visiting Obstetrician & Gynaecologist (VOG) என்று சொல்லக் கூடிய மகப்பேறு நிபுணத்துவம் மற்றும் பெண்கள் நோய் பற்றிய சிகிச்சைப் பிரிவு.

21ம் நூற்றாண்டில் நமது ஊர் கொண்டிருக்கின்ற வளங்களை வைத்துப் பார்க்கின்ற போது இந்த வெற்றிடம் எப்போதோ நிரப்பப்பட்டிருக்க வேண்டும். இஸ்லாமிய விழுமியங்களுக்குட்பட்டு வாழ்ந்து வரும் நமது பெண்கள் மகப்பேறு என்று வருகின்றபோது அந்நிய (ஆண்) வைத்தியர்களைச் சார்ந்திருக்க கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலைதான் இன்றளவும் நீடிக்கின்றது. நாம் விரும்பியோ விரும்பாமலோ நமது பெண்களை வைத்திய தேவைகளுக்காக பல தடவைகள் அந்நிய ஆண் வைத்தியர்களிடம் ஒப்படைக்க வேண்டிய நிலை இருக்கத்தான் செய்கிறது. மருத்துவம் உட்பட அனைத்து துறைகளும் வர்த்தக மயமாகிப்போயுள்ள இக்கால கட்டத்தில் ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி மகப்பேறு பற்றிய போதிய அறிவின்மையால் வைத்தியர்கள் சொல்லும் அத்தனை சோதனைகளுக்கும் தலையாட்டி பொம்மையாகவே இருக்க வேண்டிய நிலையேற்படுகின்றது.

பெண் மகப்பேற்று நிபுணர்களை நமதூர் கொண்டிருக்க வேண்டும் என்பது நம் எல்லோருடைய விருப்பமாக இருக்கின்றது. நமது மாணவிகளின் உயர்தரப் பெறுபேறுகளை பார்க்கும் போது மிக விரைவாக இக்குறை பாட்டை தீர்த்துவிட முடியும். ஆனால், அதற்குரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது சமூகத்தின் கடமை என்பதை நம்மில் பலர் மறந்து விடுகின்றோம். இது மிகவும் சவாலானதொரு துறை என்பது உண்மை. இதை அடைந்து கொள்வதற்கு குறிப்பிட்ட மாணவி, பெற்றோர் மற்றும் சமூகம் என்பவற்றின் ஒத்துழைப்பு மிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. மாணவி:
இதற்கு தகுதியான பல மாணவிகள் இருக்கின்றபோதும் சமூகத்தில் தனியா னாளாக போராட வேண்டும் என்கின்ற மனப்பாங்கும் உயர் கல்வி என்று வருகின்ற போது சமூகத்தில் எதிர் நோக்குகின்ற அநாவசியமான விமர்சனங்களுக்கு நாம் ஆளாக வேண்டிவரும் என்கின்ற பயமும்தான் அந்த மாணவிகளுக்கு இக்கல்வியில் இருக்கின்ற ஆர்வத்தை தடை செய்கின்றது. முதலில் இந்த தாழ்வு மனப்பான்மயிலிருந்து மாணவிகள் வெளியில் வரவேண்டும். அதோடு இந்த மருத்துவத் துறையினை ஒரு தொழிலாக மாத்திரம் நோக்காது சக தோழிகளுக்கான ஒரு சேவையாகவும் பார்க்க வேண்டும்.

2. பெற்றோர்:
இறைவன் தன் பிள்ளைக்கு கொடுத்திருக்க கூடிய அறிவுத்திறமையை அற்ப காரணங்களுக்காக வீணடிக்கும் பெற்றோர்களும் நம் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அளவுக்கதிகமான செல்வம் இருக்கும் போது அதை மற்றவர்களு க்கும் பகிர்ந்தளிப்பதை எப்படி இறைவன் வலியுறுத்துகின்றானோ அதே அளவுகோல்தான் கல்விக்கும் நாம் வைத்துப் பார்க்க வேண்டும். பல மாணவிகளுள் தன்பிள்ளைக்கு மாத்திரம் இறைவன் கொடுத்திருக்க கூடிய திறமையை வீணாக்காமல் தேவையான பாதுகாப்பு, பெற்றோர் என்கின்ற வரையறைக்குட்பட்ட கண்டிப்புடன் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

3. சமூகம் :
பெண் மருத்துவம் போன்ற முக்கியமான மேல் படிப்புக்களுக்கு சமூகத்தின் ஒத்துழைப்பு மிக அவசியப்படுகின்றது. திறமையிருந்தும் வறுமையின் பிடியில் இருக்கின்ற பெற்றோரை இனங்கண்டு அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்து கொடுக்க சமூகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் முன் வர வேண்டும். சொந்த முயற்சியால் வென்று வரும் மாணவர்களுக்கு சம்பிரதாயமான பதக்கம் அணிவிப் பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் புலமைப் பரிசில்கள் வழங்குவதன் மூலம் அவர்களின் உயர் படிப்புக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதோடு ஒரு சிலர் செய்கின்ற சமூக விரோதமான செயல்களை வைத்து ஏனைய மாணவிகளை எடைபோடும் கேவலமான போக்கை அனைவரும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இறுதியாக நமது உழைப்பில்தான் நாம் வாழ வேண்டும் என்று ஆசைப்படு வதுபோல, நம்மை நாம்தான் ஆழ வேண்டும் என்று ஆசைப்படுவது போல, நமது பெண்களின் மருத்துவ தேவைகளை நமது பெண்களே சீர் செய்யவேண்டும் என்ற ஆசையும் உறுதியும் பூண்டவர்களாக அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற முதுமொழிக்கமைய எமது செயற்பாடுகளை எதிர்காலத்தில் ஆக்கிக் கொள்வோமாக.

நமது உள்ளங்களிலுள்ள ஹலாலான எண்ணங்களை இறைவன் வசப்படுத்தி தருவானாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிள்ளைகளின் எதிர் காலக் கல்விக்கு உறுதியான அத்திவாரமிடுங்கள்

**Az Zahra Pre School**
அஸ் ஸஹ்றா முன் பள்ளி

**Happy Kid's Pre School**
ஹெப்பி கிட்ஸ் முன்பள்ளி



இஸ்லாமிய ஒழுக்க நெறிகளுடன் தமிழ், ஆங்கில மொழிகளுடன்
அனுபவமுள்ள ஆசிரியைகளின் வழிகாட்டலுடன் உங்கள்
குழந்தைகளை வளர்த்தெடுக்க இணையுங்கள்.

Az Zahra Avenue, Dr. Badi ud deen Mahmood Mw, New Kattankudy -03.
**077447 6060**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org